# Sancta Maria

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வெளியீடு

"சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிப்பது" (எபே. 1:10)

பாரம்பரிய கத்தோலிக்க இதழ்

ஜனவரி - பெப்ருவரி 2013


## புவி நிரம்ப பொன் தந்தாலும் திருப்பலிக்கு ஈடில்லையே !



விசுவாச ஆண்டா? நம்பிக்கை ஆண்டா?

திவ்விய பலிபூசை

தப்பறைகளின் தொகுப்புரை !!

Sancta Maria

**மலர்: 5 இதழ்: 1**
**ஜனவரி - பெப்ருவரி 2013**

வெளியிடுவோர்: அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை
ஆசிரியர்: சங். திரேஷியன் பாபு

"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக, முடிந்த வரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடம் உள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியம் ஆகும்." — பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதர்

# விசுவாச ஆண்டு 2013



## பதிதங்களை வென்ற கத்தோலிக்க விசுவாசம், மீண்டும் இவ்வுலகில் தழைத்தோங்க வேண்டிக்கொள்வோம்.

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
St. Pius X Society, 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002
Ph: 0462 - 2586201; 2572389 e-mail: sspxindia@gmail.com

*21.12.2012*

அர்ச். தோமையார் திருநாள்

## விசுவாச ஆண்டா ? நம்பிக்கை ஆண்டா ?

***கேள்வி:* வணக்கம். தங்களது நவம்பர்-டிசம்பர் 2011 இதழில் உங்கள் தலையங்கத்தை வாசித்தேன். அதில் "உண்மையில் விசுவாசம் வேறு, நம்பிக்கை வேறு. இரண்டும் வெவ்வேறு பொருள் கொண்டது" என்று நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இதைத் தயவுசெய்து இன்னும் அதிகமாக விளக்க முடியுமா?**

***பதில்:*** ஒரு செயல் அதன் பொருளால் தீர்மானிக்கப்படுகிறது. (Habits are determined by its object) எந்த ஒரு வழக்கத்தையும் சார்ந்த பொருள்களின் வகை யானது, அந்த பொருளின் ஒழுங்கு சார்ந்த தன்மையைப் பொறுத்ததாக இருக்கிறது. (Cardinal Billot, *De Virtutibus Infusis, éd, 1905 Rome, pg.84*). பார்க்கப்படும் பொருள்கள் பார்வையைத் தீர்மானிக்கின்றன. பார்ப்பதற்கு எதுவுமில்லை என்றால் பார்வை இல்லை என்று அர்த்தம். மரம் நடுதல் என்ற செயலில் மரக் கன்றுகள் இல்லை என்றால், அங்கே மரம் நடுதல் என்ற செயல் இருக்க முடியாது. இது மிகச் சாதாரணமான விஷயமாகத் தோன்றலாம். ஆனாலும் மிகச் சாதாரணமான இவ்விஷயங்களில் நாம் தவறுவதால்தான் பெரிய தவறுகளைச் செய்கிறோம். எல்லாத் தப்பறைகளுமே தொடக்கத்தில் சத்தியத்திலிருந்து சிறிதே விலகி இருப்பினும், கடைசியில் அதன் நிலை?

அதே போன்றுதான் புண்ணியங்களும். புண்ணியங்கள் என்பவை நற்பழக்கங்களைக் குறிக்கும் *(good habits)*. ஒவ்வொரு புண்ணியத்திற்கும் தனி ஒரு பொருள் *(Object)* உண்டு. அப்படி இருப்பதால்தான் அது தனிப் புண்ணியமாக இருக்கிறது. இப்புண்ணியங்கள் இரு வகைப்படும்.

(1) சுபாவத்திற்கு மேலான புண்ணியங்கள்,

(2) சுபாவமான புண்ணியங்கள்.

- சுபாவத்துக்கு மேலான புண்ணியங்கள்
  - தேவ சம்பந்தமான புண்ணியங்கள்
    - அறிவு
      - அறிவு-கடவுளைப்பற்றிய அறிவு அதை வெளிப்படுத்துகிற கடவுளின் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற புண்ணியம் - **விசுவாசம்**
    - சித்தம்
      - நமது நன்மைக்காக நமது சித்தம் கடவுளை நோக்கிச் செல்கிற ஒரு புண்ணியம் - **நம்பிக்கை**
      - தமது நிமித்தமாகவே நேசிக்கப்படுகிற கடவுளோடு நம்மை ஒன்றிக்கிற புண்ணியம் - **தேவசிநேகம்**
  - மற்ற (தலையான) புண்ணியங்கள்
    - விவேகம்
    - நீதி
    - திடம்
    - மட்டுத்திட்டம்

மற்ற (தலையான) புண்ணியங்களுக்கும், தேவ சம்பந்தமான புண்ணியங்களுக்கும் பல வித்தியாசங்கள் உள்ளன. தேவ சம்பந்தமான புண்ணியங்கள் கடவுளை நேரடியாகத் தங்களுடைய நோக்கமாகக் கொண்டிருப்பதால், இவை கடவுள் சம்பந்தமான *(Theos-logos)* புண்ணியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகளின் எண்ணிக்கை மூன்று ஆகும்.

“இப்போது விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் இம்மூன்றும் நிலைகொண்டிருக்கின்றன” என்று அர்ச். சின்னப்பர் கூறுகிறார் *(1 கொரி. 13:13)*. இந்த தேவ வாக்கியத்தில் அவர் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வேறுபடுத்திக் கூறுகிறார். ஏன்? ஏனென்றால் இவை ஒவ்வொன்றும் தனித்தனி பொருள்களைக் கொண்டுள்ளன.

நம்பிக்கை என்பது கடவுள் நம்முடைய கதியை அடைய நமக்கு வேண்டியவற்றைத் தந்தருள்வார் என்று நம் சித்தத்தை உறுதிப்படுத்தும் ஒரு தேவ சம்பந்தமான புண்ணியமாகும். இது விசுவாசத்திலிருந்து முற்றிலுமாக மாறுபட்டது.

விசுவாசம் என்பது கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை ஏற்றுக்கொள்வது. இதனை மேலும் தெளிவுபடுத்த வேண்டுமானால், இவற்றை ஒவ்வொன்றாக ஆராய வேண்டும். முதலில் விசுவாசம் என்றால் என்ன?

***சர்வேசுரனுடைய தெய்வீக அதிகாரத்தின் காரணமாக, அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள எல்லாவற்றையும் உறுதியாக சம்மதித்து ஏற்றுக்கொள்ளும்படி மனதை ஆயத்தப்படுத்துகிற ஒரு சுபாவத்துக்கு மேலானதும், தேவ சம்பந்தமானதுமாகிய புண்ணியமே விசுவாசம் ஆகும்.*** இது இரு வகைப்படும்:

**1. உயிருள்ள விசுவாசம்:** தேவ சிநேகத்தினால் நமக்குள்ள விசுவாசம். இவ்விசுவாசம்தான் நமது இரட்சண்யத்திற்கு ஏதுவாய் இருக்கிறது. தேவ இஷ்டப்பிரசாத நிலையில் இருப்பவர்களிடம் இந்த வகை விசுவாசம் இருக்கிறது. நாம் சாவான பாவம் கட்டிக் கொள்ளும்போது, இதை இழந்துபோகிறோம். அதாவது, தேவசிநேகம் இழக்கப்படும்போது, உயிருள்ள விசுவாசமும் இழக்கப்படுகிறது.

**2. உயிரற்ற விசுவாசம்:** பாவிகளிடம் இருப்பது. தேவ சிநேகம் இல்லாமலும் விசுவாசம் ஒருவனிடம் நிலைத்திருப்பது சாத்தியமே. “மலைகளைப் பெயர்க்கத்தக்க எவ்வித விசுவாசத்தையும் உடையவனாயிருந்தாலும், என்னிலே தேவசிநேகம் இல்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை” *(1 கொரி. 13:2)*. தேவ சிநேகம் இல்லாத இந்த விசுவாசம் பயனற்றது.

விசுவாசம் என்பது கடவுள் வெளிப்படுத்தினவைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வது. இந்தப் புண்ணியத்தைக் கொண்டு விசுவாசப் பிரமாணத்தில் உள்ளவற்றை, திருச்சபை போதிப்பவற்றை (தேவரீர் தாமே திருச்சபைக்கு அறிவித்திருக்கிற படியினால்) நாம் உறுதியாக விசுவசிக்கிறோம்.

இதனை சிலர் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இதுவே அவர்களுடைய விசுவாச இழப்புக்குக் காரணமாகவும் இருக்கிறது. உதாரணமாக:

▪ ***லூத்தர்:*** விசுவாசம் என்பது தேவ இரக்கத்தில் நம்பிக்கை கொள்வதாகும். (இதை இப்போது கத்தோலிக்கர்களும் ஏற்றுக்கொள்வது வருத்தத்திற்குரியது).

▪ ***பகுத்தறிவாளர்கள்:*** விசுவாசம் என்பது நம் சொந்த முயற்சியால் கடவுளைப்பற்றி நாம் அறிந்து கொள்ளக்கூடிய காரியங்களாகும்.

▪ ***நவீனர்கள்:*** விசுவாசம் என்பது கடவுளின் அவசியத்தைப்பற்றிய ஒருவிதமான உள்ளார்ந்த ஏக்கம் *(immanent desire)* ஆகும்.

எனவே, விசுவாசம் வேறு, நம்பிக்கை வேறு. சுவிசேஷத்தில் சில சமயங்களில் நமதாண்டவர் கூறும் விசுவாசம் என்பது நாம் விசுவாசத்தோடு செயல்படவேண்டும் என்பதைக் குறிக்கிறது. *(Confidence = cum + fiducia* விசுவாசத்தோடு.)

ஆகவே, அன்புள்ள வாசகர்களே, நம் விசுவாசப் பிரமாணத்தில் எடுத்துரைக்கப்படும் விதத்திலும், நம் ஞானோபதேசங் களில் விளக்கப்படுகிறபடியும், நாம் நம் விசுவாசத்தைக் கற்றுக்கொள்வோமாக. ஏனெனில், பரிசுத்த வேதாகமம் சொல்வது போல, விசுவாசம் இல்லாமல் கடவுளைப் பிரியப்படுத்த நம்மால் இயலாது. எனவே இந்த விசுவாச ஆண்டில் மெய்யான விசுவாசம் நம்மிலும் மற்றவர்களிடத்திலும் வளர தேவதாயை மன்றாடுவோமாக.

Benedicamus Dómino

Fr. Therasian +

**சங். திரேஷியன் பாபு**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**


**Reference:** Summa Theologica, IIa, IIae, q, 1-9

Garrigou Lagarange OP, *De Fide,* édition Paris, 1948

Tanquerey, *Synopsis Theologicae, Volume 1, De Objecto Fidei,* cap 1. Pg 14-67 ( édition Rome)

# திவ்விய பலிபூசை மெய்யான பலி

**பூசைப்பலி போல் பாக்கிய செல்வம் புவியில் இல்லையே ! இவ்வரிய செல்வத்தின் மகத்துவத்தை கத்தோலிக்கர்கள் அறிய வேண்டும் என்பதற்காக இவ்விதழ் திவ்விய பலிபூசையை மையமாகக் கொண்டுள்ளது. வாசகர்கள் அனைவரும் இதனை தியானித்துப் பயன்பெற உங்களை அழைக்கிறோம் – ஆ.ர்**

மேற்றிராணிமார்கள் தங்கள் மேற்றிராசனத்தைச் சேர்ந்த விசுவாசிகளுக்கு திவ்விய நற்கருணைப் பக்தியையும், திவ்விய பலிபூசை பக்தியையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். தேவ கோபாக்கினை அமரவும், உலக சமாதானம் ஏற்படவும் நாம் எல்லோரும் கையாளவேண்டிய சாதனங்கள் திவ்விய நன்மையும், திவ்விய பலிபூசையுமாம்.

இவ்வுன்னத நோக்கம் வெற்றிகரமாய் முடியவேண்டு மானால், பின்வரும் ஐந்து விஷயங்களை பங்குக் குருக்கள் தத்தம் கிறீஸ்தவர்களுக்குத் தெளிவாய் எடுத்துக் காண்பிக்க வேண்டுமென்று உரோமை அறிக்கை கூறுகிறது.



1. திவ்விய பலிபூசையின் மேன்மை, அதன் நோக்கங்கள், அதனால் விளையும் அளவில்லாப் பலன்கள், பூசைச் சடங்குகள், அவைகளின் அர்த்தம்.

2. ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் பூசை காணவேண்டிய கண்டிப்பான கடமை. அந்நாட்களில் திவ்விய பலிபூசை காண்பது நாம் சர்வேசுரனுக்குச் செய்யும் மகா அவசியமான பொது வெளி ஆராதனை.

3. நமக்கு அவசரமான உபகாரங்களைப் பெறுவதற்கும், தேவ நீதிக்குப் பரிகாரம் செய்வதற்கும் ஏற்ற வழி திவ்விய பலிபூசை. கிறீஸ்தவர்கள் இதை நன்கு உணர்வார்களேயாகில் அநுதினமும் திவ்விய பலிபூசைக் காண பின்வாங்க மாட்டார்கள். இதனால் அவர்களுக்கு அபரிமிதமான தேவ ஆசீர்வாதமும், நவமான உபகாரங்களும், பாவத்திற்குரிய அநித்திய தண்டனையின் மன்னிப்பும் பெறுவார்கள்.

4. பூசையில் தெய்வீகப் பந்தியில் அமர்ந்து நற்கருணை அருந்தும் பாக்கியம்.

5. மோட்சவாசிகள், உத்தரிக்கிற ஆத்துமாக்கள், இவ்வுலகிலுள்ள விசுவாசிகள் இவர்களுக்குள் இருக்கும் ஐக்கியமாகிய அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூதீதப் பிரயோஜனமென்கிற ஆறுதலான வேத சத்தியம்.

திவ்விய பலிபூசையைப்பற்றி மேற்கூறிய ஐந்து காரியங்களையும் நாம் விபரமாய் எடுத்துரைக்க வேண்டு மானால், வெகுவாய் நீளும். சில முக்கியமான அம்சங்களை மாத்திரம் இங்கு எடுத்துக் காண்பிப்போம்.

### தொன்றுதொட்டு உலகில் பலிகள் நடந்தேறிவருகிறது

ஆதாமின் குமாரன் நீதிமான் ஆபேல் ஆட்டுக் குட்டியை தேவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். சகல விசுவாசிகளுக்கும் அதி பிதாவாகிய ஆபிரகாம் தேவனுடைய கட்டளைப்பிரகாரம் தமது ஏக குமாரன் ஈசாக்கைப் பலி கொடுக்கத் தயாராயிருந்தார். பெரிய குருவாகிய மெல்க்கி-செதெக் அப்பத்தையும், இரசத்தையும் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். அஞ்ஞானிகள் தங்கள் தேவதை களுக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலும், கனிவர்க்கங்களோ, ஆடு மாடுகளோ, தின்பண்டங்களோ இவைகளைப் பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். அதுபோலவே, பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவ பிரஜைகள் தேவனுக்கு பலி சமர்ப்பித்து வந்திருக்கிறார்கள்.

## பலியின்றி வேதமில்லை

இந்தப் பலிகள் எல்லாம் மெய்யான பலியான திவ்விய பலிபூசையின் முற்குறிப்புகளாகவும், அடையாளங்களாகவும் இருந்தன. தீர்க்கதரிசனங்களும் இதற்கு அத்தாட்சி. "உங்கள் மட்டில் எம் மனது திருப்திகொள்ளாது; உங்கள் கரத்தினின்று காணிக்கைகளை ஏற்றுக்கொள்வோம் என்கிறார் சேனைகளின் ஆண்டவர். சூரியன் உதயம் தொட்டு அஸ்தமன பரியந்தம் நமது நாமகரணம் ஜனங்கள் நடுவில் மகத்தானதாயிருக்கின்றது. எவ்விடத்திலும் சுத்தமான காணிக்கை எனக்குப் பலியாக்கி ஒப்புக்கொடுக்கப்படுகிறது." *(மலக்கியா. 1:10,11)*

இத்தீர்க்கதரிசன வாக்கின்படி சகல இடங்களிலும் பலியாக்கி ஒப்புக்கொடுக்கப்படும் சுத்தமான காணிக்கை திவ்விய பலிபூசையன்றி வேறல்ல.

## திவ்விய பலிபூசை ஸ்தாபித்த விதம்

சுவிசேஷகர்களான மத்தேயும், மாற்க்கும், லூக்காசும், பவுல் அப்போஸ்தலரும் திவ்விய பலிபூசை ஸ்தாபித்த விதத்தை வெகு தெளிவாய் வரைந்திருக்கிறார்கள். *(மத்.26:26, 27, 28; மாற்கு. 13:22, 23, 24; லூக். 22:19, 20; 1கொரி. 11:23-25.)*

அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபம் 11-ம் அதிகாரத்தில் சொல்லுகிறதாவது:

"ஆண்டவரிடத்தில் நான் பெற்றுக்கொண்டதையே உங்களுக்கு கையளித்தேன். அதென்னவெனில், ஆண்டவராகிய சேசுநாதர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரி யிலே அப்பத்தை எடுத்து, தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் இதை வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் சரீரமாயிருக்கிறது. என் ஞாபகமாக இதைச் செய்யுங்கள் என்றார். அசனம் பண்ணின பின்பு அந்தப் பிரகாரமே அவர் பாத்திரத்தை எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தில் புதிய உடன்படிக்கையாயிருக் கின்றது. இதை நீங்கள் பானம்பண்ணும்போதெல்லாம் என் ஞாபகமாகச் செய்யுங்கள்" என்றார்.

இவ்வார்த்தைகளுக்கு அர்த்தம் என்னவென்றால், நமது அன்புள்ள இரட்சகர் தமது திருச் சரீரத்தையும், திரு இரத்தத்தையும் சற்பிரசாத குணங்களுக்குள்ளே அமைத்து இரத்தஞ் சிந்தாத பலியாகப் பரம பிதாவுக்கு ஒப்புக் கொடுத்தார் என்பதே.

## பாரம்பரியத்தின் அத்தாட்சி

அப்போஸ்தலர்களும், அவர்களுக்குப் பின்னால் வந்த மேற்றிராணிமார்களும், குருக்களும் இந்த அர்த்தத்தோடே திவ்விய பலிபூசை செய்தார்கள் என்று சரித்திரவாயிலாய் அறிகிறோம்.

திருச்சபையில் ஆதிகாலம் துவக்கி, 16-ம் நூற்றாண்டு வரையில் ஐரோப்பா முழுவதும் பலிப்பீடம் இல்லாத கிறீஸ்தவக் கோவில் கிடையாது என்பது உண்மை. நமது புரொட்டெஸ்டாண்டு சகோதரர்கள் அர்ச். அகுஸ்தீன், அர்ச்.கிரகோரியார், அர்ச். ஜெரோம், அர்ச். சிரில், அர்ச். ஜான் கிறிசோஸ்தம், அர்ச். சிப்பிரியான், அர்ச். பேட்ரிக் இவர்கள் எல்லோரும் பெரிய அர்ச்சியசிஷ்டவர்கள் என்று ஒப்புக் கொள்வார்கள். அவர்களுடைய பெயரால் தேவாலயங்களை கட்டுவார்கள். அவர்களுடைய பெயரைத் தரித்துக் கொள்வார்கள். இந்த அர்ச்சியசிஷ்டவர்கள் எல்லோரும் திவ்விய பலிபூசை செய்தார்களாவென்று கேட்டால், ஆம், அவர்கள் பூசை செய்தார்களென்று ஒப்புக்கொள்ளவேண்டும். தப்பமுடியாது. அர்ச். மோனிக்கம்மாள் சாகிறதற்கு முன், தமது நேச குமாரன் அர்ச்.அகுஸ்தீனைக் கேட்டது ஒரேயொரு காரியம்: "நான் இறந்து போன பிற்பாடு திவ்விய பலிபூசையில் என்னை மறக்கவேண்டாம்."

இன்றைக்கு கத்தோலிக்கக் குருக்கள் செய்யும் திவ்விய பலிபூசையானது அர்த்த சாரமற்ற சடங்கென்று பிதற்றுகிற வர்கள் அர்ச். அகுஸ்தீன் செய்த பூசையும் அர்த்த சாரமற்ற சடங்கென்று சொல்லவேண்டியிருக்கும். ஆனால், அப்படிச் சொல்லத் துணிய மாட்டார்கள்.

இங்கிலாந்து தேசத்து அரசன் எட்டாவது ஹென்றி என்பவருக்கு 1521-ம் வருடம் அக்காலத்தில் திருச்சபையை ஆண்டுவந்த 10-வது லியோ பாப்பரசர் "விசுவாசத்தைக் காப்போன்" என்கிற மகிமைப் பட்டத்தை நல்கினார். இது லூத்தர் என்பவருக்கு விரோதமாய் ஏழு தேவதிரவிய அநுமானங்களை அங்கீகரித்து மறுப்பு எழுதினதற்கு சன்மானம். இம்மகிமைப் பட்டத்தை இங்கிலாந்து தேசத்து பாராளுமன்றமும் 1544-ம் வருடம் ஊர்ஜிதப்படுத்தி, அந்நாள் துவக்கி இருபதாவது நூற்றாண்டு வரையில் இங்கிலாந்து இராஜாக்களும், இராணிகளும் இந்நாமத்தைத் தரித்துவந்து இருக்கிறார்கள். இதை மறுப்பார் ஒருவரும் இல்லை.

எங்கும் எப்போதும் எவராலும் அங்கீகரிக்கப்பட்ட போதனையானது மறுக்கப்படாத சத்தியம். திவ்விய பலிபூசை யானது இப்பேர்ப்பட்ட போதனை.

## திவ்விய பூசை மெய்யான பலி

மனித கடவுளாகிய திவ்விய சேசு கிறீஸ்துநாதர் கல்வாரி மலையில் சிலுவையில் அறையுண்டு, கடைசித் துளி வரையில் தமது விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தைச் சிந்தி, தமது பரம பிதாவுக்குத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்து நம்மை இரட்சித்தார் என்பது குன்றாத சத்தியம். இத்திருச்சிலுவைப் பலியைப் புதுப்பித்து நமது பீடங்களின்மேல் அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் குருவானவரின் கரங்களால் சேசுநாதருடைய திருச்சரீரத் தையும், திரு இரத்தத்தையும் ஒப்புக்கொடுக்கிறதே திவ்விய பலிபூசை எனப்படும்.

சிலுவையின் பலி இரத்தம் சிந்தின பலி. பீடத்தின் பலி இரத்தம் சிந்தாத பலி. இந்த இரண்டு பலியும் ஒரே பலி தான். ஏனென்றால், இவ்விரு பலிகளிலேயும் சேசுநாதர்தான் பிரதான குருவும், பலிப்பொருளாகவுமிருந்து பரம பிதாவுக்கு இதை ஒப்புக்கொடுக்கிறார். திவ்விய பலிபூசை நிறைவேற்றும் போது சர்வேசுரனுக்கு மெய்யான பலி ஒப்புக்கொடுக்கிற தில்லை என்று யாதாமொருவன் சொன்னால், அவன் சபிக்கப் பட்டவன் என்பது திரிதெந்தீன் பொதுச் சங்கத்தின் தீர்மானம்.

## திவ்விய பலிபூசை காணும் விதம்

அன்பார்ந்த பிள்ளைகளே!

நீங்கள் அதிகாலை உங்கள் வீட்டைவிட்டு தேவாலயத்திற்கு பூசை காணப் போகும்போது, நமதாண்டவர் மரிப்பதற்கு முந்தின நாள் இராப்போசன நேரத்தில் ஏற்படுத்திய இரத்தஞ் சிந்தாத பலிபூசையையும், மறுநாள் கல்வாரி மலையில் நடந்த இரத்தஞ் சிந்தின பலியையும் தினந்தோறும் உலகமெங்கும் நமது பீடங்களில் புதுப்பிக்கப்பட்டுவரும் திவ்விய பலிபூசையையும் நினைவுகூர்ந்து தியானித்துக்கொண்டு செல்லுங்கள். பூசைநேரத்தில் நீங்களும் குருவானவரும் சேர்ந்து பலி ஒப்புக்கொடுக்கிறீர்கள் என்பதை ஒருபோதும் மறக்க வேண்டாம். இதனாலேதான் குரு பூசையில் கை கழுவின பிற்பாடு விசுவாசிகளைப் பார்த்து "சகோதரரே! என்னுடையவும், உங்களுடையதுமான பலியானது சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பிரியமாயிருக்கத் தக்கதாக மன்றாடுங்கள்" என்று வேண்டிக்கொள்ளுகிறார்.



இதனாலேயே, பூசை நேரத்தில் நீங்கள் கிறீஸ்துநாதர் மூலமாயும், அவரோடும், அவரிலேயும் பரம பிதாவுக்கு இந்தப் பலியை ஒப்புக் கொடுக்கவேண்டும். இதைப்பற்றி கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: "உன் பாவங்களால் வந்த தேவ கோபாக்கினையை அமர்த்தும்படி நாம் சிலுவை மரத்தில் நம்மை முழுவதும் பரம பிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்ததுபோல, நீயும் நாள்தோறும் பூசையில் உன் ஆத்துமத்தின் சர்வ சத்துவத்தோடும், பற்றுதலோடும், உன்னால் கூடிய மன உற்சாகத்தோடும் நமக்கு உன்னைத் தானே பரிசுத்த திருப்பலியாக வலிய ஒப்புக்கொடுக்கக்கடவாய். நீ உன்னை முழுவதும் நமக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்கிறதல்லாது உன்னை நாம் வேறென்ன கேட்கிறோம்? உன்னையன்றி நீ வேறு என்னத்தையும் நமக்குக் கொடுத்தாலும், அது நமக்குத் தேவையில்லை. ஏனெனில், நாம் உன்னையே தேடுகிறோம் அல்லாமல் உன் காணிக்கைகளைத் தேடுகிறதில்லை." (நான்காம் புத்தகம். 8-ம் அதி.)

உத்தம விதமாய் பூசை காணும் வழியென்னவென்றால், குருவானவர் செய்யும் சடங்குகளின் அர்த்தங்களைக் கிரகித்து, அவர் சொல்லும் ஜெபங்களை நாமும் அவரோடு சேர்ந்து சொல்லுவதேயாம்.

## திவ்விய பலிபூசையின் நோக்கங்கள் அல்லது நமது கடமைகள்

அர்ச். தாமஸ் அக்குவினாஸ் என்னும் பெரிய வேத சாஸ்திரியானவர் சொல்லும் பிரகாரம் நாம் செலுத்தவேண்டிய பிரதான கடமைகள் நான்கு.

1-வது தேவனுடைய அளவற்ற மகத்துவத்தை இடைவிடாது ஆராதித்து ஸ்துதித்து தோத்தரிக்கவேண்டிய கடமை.

2-வது அவருடைய திவ்விய மகத்துவத்திற்கு விரோதமாய் நாம் கட்டிக்கொண்ட எண்ணற்றப் பாவங்களுக்குப் பரிகாரஞ் செய்யவேண்டிய கடமை.

3-வது நாம் நாள்தோறும் அடையும் உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்தும் கடமை.

4-வது சகல வரங்களுக்கும் ஊற்றாகிய அவரிடம் நாம் நமக்கு வேண்டியவைகளைக் கெஞ்சி மன்றாடும் கடமை.

இந்த நான்கு கடமைகளும் திவ்விய பலிபூசையில் உத்தம மேரையாய் செலுத்தப்படுகின்றதென்பது தேற்றம்.

## திவ்விய பலிபூசையின் மகத்துவம்

"திவ்விய பலிபூசையானது சர்வேசுரனுடைய நேசம் என்ற சமுத்திரம் முழுவதையும் அடக்கிய ஒரு பரம இரகசியம்" என்று உரைக்கிறார் அர்ச்.சலேசியார். அது சர்வேசுரனுடைய களஞ்சியமென்றும், சிலுவையிலே கிறீஸ்துவின் மரணத்தினாலுண்டான பேறுபலன்கள் எவ்வளவோ அவ்வளவு பூசையிலும் உண்டு என்றும் கூறுகிறார் அர்ச்சிஷ்ட கிறிசஸ்தோம் அருளப்பர்.

"திவ்விய பலிபூசையானது சர்வேசுரனுடைய சகல அற்புதங்களிலும் அதிமேலான அற்புதமாவதோடு, அவர் செய்தருளிய சகல அற்புதங்களிலும் சங்க்ஷேபமுமாம்" என்று வசனித்து இருக்கிறார் அர்ச்.தாமஸ் அக்குவினாஸ்.

சகல சம்மனசுகளும் தங்கள் நமஸ்காரங்களினால் சர்வேசுரனுக்குக் கொடுத்திருக்கிற மகிமையையும் சகல மனிதரும் தங்கள் புண்ணியங்கள், ஜெபதபங்கள், பரித்தியாகங்கள், நற்கிருத்தியங்களினால் கொடுத்திருக்கிற மகிமையையும் ஒன்றாகக் கூட்டிப் பார்த்தாலும், இவையெல்லாம் ஒரேயொரு பூசையினாற் சர்வேசுரன் அடைகிற மகிமைக்கு ஈடாகாது என்கிறார் அர்ச். லிகோரியார்.

"திவ்விய பலிபூசையானது வெறும் ஆசார வார்த்தைகள் அல்ல. இது மகா பெரிய காரியம். இதற்கு மேலான கிருத்தியம் வேறில்லை. சம்மனசுகள் சிரம் பணிந்து ஆராதிக்கும் மனித கடவுள், பசாசுகளை நடுநடுங்கச் செய்கிறவர். இவரை தமது சரீரத்துடனும் இரத்தத்துடனும் பலிப்பீடத்தில் இறங்கும்படி செய்வது திவ்விய பலிபூசையே" என்று வரைந்திருக்கிறார் கர்தினால் நியூமன்.

**வந். பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை**
**தூத்துக்குடி, 1942**

# சிலுவைப் பலியும் பூசைப்பலியும்

**வந். பீட்டர் பிரான்சீஸ்,**
கும்பகோணம் மேற்றிராணியார், 1944

தேவ ஆராதனைமுறைப் பக்தி உலகெங்கும் பரவிச் செழித்திலங்க வேண்டுமென்பது திருச்சபையின் ஆவல்; தேவ ஆராதனைச் சடங்குகளைக் கத்தோலிக்கர் யாவரும் ஆராய்ந்து அறியவேண்டுமென்பது அதன் விருப்பம். இந்தத் தேவ ஆராதனைச் சடங்குகளில் அதிமுக்கியமாய் நடுநாயகமாக விளங்குவது திவ்விய பலிபூசையாம். அதுவே திருச்சபையின் உயிர்; விசுவாசிகளின் சிறந்த செல்வம். எனவே, திவ்விய பலிபூசையை நிறைவேற்றும் குருவான வரோடு, விசுவாசிகள் ஒன்றித்து அதனைப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுப்பதே நியாயமாகும்.

திவ்விய பலிபூசையின் மகத்துவத்தைப்பற்றியும், அதனால் உண்டாகும் எண்ணிலடங்காத நன்மைகளைப் பற்றியும் பெரிய பிரபந்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் இங்கு அப்பலியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது விசுவாசிகளுக்குப் பிரயோசனமாயிருக்குமெனக் கருதுகின்றோம்.

வேதத்திற்குப் பலி இன்றியமையாத அம்சமாகும். மனிதன் மட்டில் சர்வேசுரனுக்குள்ள பூரண அதிகாரத்தை அங்கீகரிக்கும்பொருட்டு, உலக ஆரம்பத்திலிருந்தே அவருக்கு பலி செலுத்தப்பட்டுவந்தது. ஆபேல், காயின், நோவே, மெல்கிசெதெக் பலி செலுத்தினார்களென்று வேதாகமத்தில் வாசிக்கின்றோம். தேவன் தாம் தெரிந்துகொண்ட இஸ்ராயேல் ஜனங்கள் தமக்கு எவ்விதமான பலிகள் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், அவைகள் எந்த ஒழுங்கில் செய்யவேண்டு மென்றும் மோயீசன் வழியாய்க் கற்பித்தருளினார். இப்பலிகளெல்லாம் சேசு கிறீஸ்துநாதர் நிறைவேற்றவிருந்த திருப்பலியின் அடையாளங்களாய் இருந்தமையால், அவை சர்வேசுரனுக்கு உகந்தவையாய் இருந்தன. சேசுவின் பலி துவங்கியதும், இப்பலிகள் பயனற்றுப்போயின. "கிறீஸ்துநாதர் உலகத்தில் அவதாரமானபோது சொல்லுவதாவது: நீர் பலியையும் நைவேத்தியத்தையும் விரும்பாமல் எனக்கோர் சரீரத்தைப் பொருத்தினீர். பாவத்திற்குப் பரிகாரமாக தகனப் பலிகள் உமக்குப் பிரியப்படவில்லை. அப்பொழுது என்னைக் குறித்து புத்தகத்தின் ஆரம்பத்தில் எழுதியிருக்கிறதுபோல், சர்வேசுரா, உமது சித்தத்தின்படியே, இதோ, வருகிறேன் என்று சொன்னேன் என்றார்" (எபிரேயர். 10:5-7). ஆகையால், நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துநாதர் மனித சுபாவம் எடுத்த கணத்திலேயே தம்மைப் பரமபிதாவுக்கு ஏற்ற பலியாய் அளித்தார். கடைசியாய் திருச்சிலுவையில் தமது உதிர மெல்லாஞ் சிந்தி, ஜீவனையும் தந்து பிதாவுக்கு உகந்த உன்னதப் பலியானார். இப்புதிய ஏற்பாட்டின் பலியால் பழைய ஏற்பாட்டின் பலிகள் மாற்றப்பெற்றதோடு, முடிவும் அடைந்தன. மலக்கியாஸ் தீர்க்கதரிசி சொன்னதும் நிறைவேறியது. "சூரியன் உதயம் தொட்டு அஸ்தமனம் பரியந்தம் நமது நாமகரணம் ஜனங்கள் மத்தியில் மகத்தானதாய் இருக்கும். எவ்விடத்திலும் பலியிடப்படும். நமது நாமத்திற்கு நிர்மலமானப் பலி நடந்துவருகிறது. ஏனெனில், நமது நாமம் ஜனங்களுக்குள் சிறந்ததாயிருக்கின்றது என்கிறார் சேனைகளின் ஆண்டவர்" (மலக்கியாஸ். 1:10-11) என்றபடி திவ்விய பலிபூசை பூலோக எத்திசையிலும் சதா நடந்துகொண்டு இருக்கிறது. திரிதெந்தீன் கூட்டமும் இதைப்பற்றி "பூசைப்பலி உண்மையானப் பலி; கிறீஸ்துநாதர் கல்வாரிமலையில் தம்முயிரைப் பலியாகக் கொடுத்து ஏற்படுத்திய சிலுவையின் பலி இதனால் ஞாபகப்படுத்தப்படுகிறது" என்றும், "சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தின் பலன், பூசைப் பலியால், மனிதர் ஒவ்வொரு நாளும் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றது" என்றும் வரையறுத்துச் சொல்லியிருக்கின்றது.

ஆதலின், சிலுவைப்பலியும் பூசைப்பலியும் ஒன்றே; பலியாகும் பொருளும், பலியிடும் குருவும் நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துநாதர்தான். பலி செய்யப்படும் விதத்தில்தான் வித்தியாசம். கல்வாரிமலையில் சேசு இரத்தம் சிந்திப் பலியானார்; பலிப்பீடத்தில் இரத்தம் சிந்தாது, தேவ வசீகர வார்த்தைகளால், சரீரத்திலிருந்து இரத்தம் பிரிக்கப்பட்டு ஞானவிதமாய்ப் பலியாகின்றார். சிலுவையில் சேசு தம்மை தனியாய் இருந்து பலியிட்டார்; பலிப்பீடத்திலோ சேசு பிரதான குருவாயிருந்து, வேறொரு குருவை துணைக் கருவியாய்க்கொண்டு தம்மைப் பலியிடுகிறார். சிலுவையில் தமது சுயரூபத்தில் பலியானார்; பீடத்தில் அப்பத்தினுடை யவும் இரசத்தினுடையவும் ரூபங்களில் பலியாகின்றார். சிலுவைப் பலியில் நமது இரட்சண்யத்தை விலைகொடுத்து வாங்கினார், பூசையில் தாம் உதிரஞ் சிந்தி உயிரை அளித்துச் சம்பாதித்தப் பேறுபலன்களை ஒவ்வொரு விசுவாசியின் ஆத்தும இரட்சண்யத்திற்காக பகிர்ந்துக் கொடுக்கிறார். சிலுவைப்பலி ஒரேயொரு தடவைதான் நடைபெற்றது;

பூசையோ தினமும் நடைபெறுகின்றது; பூலோக முடிவு பரியந்தம் நடைபெறும். ஆகவே அதே சிலுவைப்பலி நமது ஒவ்வொருவருடையவும் ஆத்தும இரட்சண்யத்திற்காக திரும்பவும் திரும்பவும் ஒப்புக்கொடுக்கப்படுகிறதுதான் திவ்விய பூசைப்பலியாகும்.

திவ்விய பூசையைவிட மேலான பலியும் கிடையாது; பக்தி முயற்சியும் இல்லை. சேசு கிறீஸ்துநாதரைத் தவிர்த்து மனிதர்களுக்கு வேறே இரட்சகர் இல்லையென்றால், திருப் பலிப்பூசையைத் தவிர்த்து பரமபிதாவுக்கு உகந்த பலி வேறெதுவுங் கிடையாது. மனிதர்மட்டில் கர்த்தருடைய அதிகாரத்தைக் காட்ட ஆராதனைப்பலியும், அவர் நமக்குச் செய்யும் உபகாரங்களுக்கு நன்றி செலுத்தத் தோத்திரப் பலியும், ஆண்டவருடைய கோபம் நீங்கவும் பாவி மனந் திரும்பவும் செய்யும் தகனப்பலியும், இகபர நன்மைகளடைய நாம் செய்யும் வரம் பெறும் பலியும் திவ்விய பலிப்பூசையில் அடங்கியிருக்கின்றன. சர்வேசுரனுக்கு ஏற்ற மகிமையும், புகழ்ச்சியும், ஆராதனையும் அளிக்க பலிப்பூசையைத் தவிர்த்து வேறெந்த வழியுமில்லை; அதேபோல் மனிதனுக்கு வேண்டிய சகல நன்மைகளையும், வரங்களையும் அளிக்கப் பூசைப்பலி யன்றி வேறொரு பக்திக் முயற்சியும் கிடையாது. திவ்விய பலிப்பூசையில் தேவன் தம்மை முழுமையும் மனிதனுக்கு அளிக்கின்றார்; அதேபோல மனிதனும் பலிப்பூசையில் சேசுவோடு தன்னை முழுவதும் ஆண்டவருக்கு அர்ப்பணஞ் செய்கிறான். திவ்விய பலிப் பூசையே திருச்சபைக்குப் பாதுகாவல்; அதன் வெற்றிகளுக்கும், சந்தோஷத்திற்கும் அதுவே காரணம். பூவுலகம் அழியாமல் காப்பதும் அதுவே. ஜனசமூகத்திற்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சண்யமா யிருப்பதும் அதுவே. கிறீஸ்துநாதருடைய புண்ணியங்களின் சாரமும் அதுவே; அவர் போதித்த நற்போதகங்களின் சுருக்கமும் அதுவே. கிறீஸ்தவன் அநுசரிக்கவேண்டிய நல்லொழுக்கங்களையும், புண்ணியங்களையும் கற்பிக்கும் கல்விச்சாலையும் அதுவே. அப்போஸ்தலர்களும், வேதசாட்சி களும், துதியரும், வேதபாரகரும், கன்னியரும், தபோதனரும், பரிசுத்த மேற்றிராணிமார்களும், பாப்புமார்களும், பரிசுத்தவான்கள் அனைவருமே, வீரியமும், அருஞ்செயற் பயிற்சியும், உடற்பயிற்சிசாலையும் அதுவே. ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால், மனிதன் இப்பூவுலகில் பெரிதாய் மதிக்கவேண்டிய பொருள் பூசைப்பலியே.

அப்படியானால் பூசைக் காண உத்தமமான முறை யாது? என நீங்கள் கேட்கலாம். பூசை நேரத்தில் ஜெபமாலை சொல்வதும், பக்திக்கடுத்த ஜெபங்களைச் சொல்வதும், நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துநாதருடைய ஜீவியத்தைப் பற்றியும் விசேஷமாய் அவருடைய பாடுகளைப்பற்றியும் தியானிப்பதும் நல்ல முறைகள்தான். ஆனால், அவை எல்லாவற்றையும்விட பூசைப்புத்தகத்தை உபயோகித்து, அதிலுள்ள அன்றன்றைய பூசைகளை வாசித்து, தியானித்து, குருவின் கைங்கரியத்தோடு ஒன்றித்து, கிறீஸ்துநாதரையும் அவரோடுகூட நம்மையும் பிதாவுக்குப் பலியாக ஒப்புக் கொடுப்பதே மிகவும் சிறந்த முறையாகும்.

ஏனெனில், பூசைப்பலி ஒரு சாதாரண ஜெபமன்று. பலியிடுதல் என்னும் புனிதமான ஓர் செய்கையாகும். இத்திரு அலுவலில் பலியிடும் குருவோடு நாம் எவ்வளவுக்கு ஒன்றித் திருக்கிறோமோ, அவ்வளவுக்குத்தான் நாம் அவ்வலுவலைச் செவ்வனே செய்தல் கூடும். அப்படியானால், பூசைப்பலியை ஒப்புக்கொடுக்கும் பிரதம குரு நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துநாதர்தான். அவருடன் ஒன்றித்து நாமும் பலியிடுவது நம் கடன். மெய்யான விசுவாசத்தால் ஏவப்பெற்று சேசு பிதாவுக்குத் தம்மை கல்வாரிமலையில் தகனப்பலியாக்கிக் கொண்டபோது, என்ன உணர்ச்சிகள், என்ன நோக்கங்கள் கொண்டிருந்தாரோ அவற்றை நாமும் கொண்டிருப்பது அவசியம். அத்தகைய உன்னத உணர்ச்சிகளோடு நாம் பூசைக் காணவேண்டுமென்று திருச்சபையும் வற்புறுத்துகின்றது. பலிப்பூசையில் கிறீஸ்துநாதருக்குத் துணைக்கருவியாய் இருக்கும் குருவோடும் நாம் ஒன்றித்திருக்கவேண்டும். மெய் மறை குருவானவர் கிறீஸ்துநாதருடைய ஞான அவயவங்க ளாகிய சகல விசுவாசிகள் பேராலும் பலியை ஒப்புக் கொடுக்கிறார் என்பதைக் கண்டுணர வேண்டும். மாசற்ற செம்மறிப்புருவையாகிய சேசு குருவின் தேவ வசீகர வார்த்தைகளால்தான் பீடத்தில் எழுந்தருளுகிறார் என்பது உண்மையே. ஆனால் அம்மாசற்ற செம்மறிப்புருவையைப் பலியாக்கும்பொழுது, நாமும் அவருடன் ஒன்றித்து, ஒரே ஆசை, ஒரே நோக்கம், ஒரே ஜெபத்தோடு பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். ஏனெனில் “சேசு திருச்சபையின் தலைவராகவும், தமது ஞான சரீரமாகிய விசுவாசிகளின் தலையாகவுமிருந்து, சகல விசுவாசிகளையும், பாவிகளையும் பலவீனர்களையும் தம்மோடு ஒற்றுமைப்படுத்திக்கொண்டு பலியாகிறார்” என்று திருச்சபை கற்பிக்கின்றது. ஆதலால் நாமெல்லோரும் கிறீஸ்துநாதரின் இராஜரீக குருத்துவத்தில் சேர்ந்திருக்கிறோம். சேசுவின் வழியாய், சேசுவில் நாமும் இருந்து, சேசுவோடு நம்மையும் திருப்பலியாக்கிக் கொள்கிறோம் என்பதை நாம் கண்டுணரவேண்டும். எனவே, குருவானவரோடு அவர் சொல்லும் ஜெபங்களை நாம் சொல்வதும், அவர் செய்யும் செய்கைகளையும், சடங்கு களையும் நுட்பமாகக் கவனிப்பதும் அவசியம். குருவோடு நாம் எவ்வளவுக்கு ஒன்றித்திருக்கிறோமோ, அவ்வளவுக்கு நாம் கிறீஸ்துநாதரோடு ஒன்றித்திருப்போம். அதற்குத் தகுந்தாற்போல் நமது பலியும் பிதாவுக்குப் பிரியமுள்ளதாகும். எனவே பூசைப்புத்தகத்தைப் பின்பற்றிப் பூசை காண்பதே பூசை காணும் மிகச் சிறந்த முறையாகும்.



# பரிசுத்த பூசைப் பாத்திரங்கள்

**சங். பிரான்சீஸ் கான்னல்,**
''திவ்விய பலிபூசை நிறைவேற்றும் முறை''
என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதற்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்கும் காரியத்தில், திருச்சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகள் அனுசரிக்கப்பட வேண்டுமென்றும், திருச்சபையின் பாரம்பரியம் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமென்றும், இயன்றவரை, பரிசுத்த கலைக்குரிய சட்டங்கள் அனுசரிக்கப்பட வேண்டுமென்றும் திருச்சபைச்சட்டம் கூறுகிறது. திவ்விய பலிபூசைக்காகப் பயன்படுத்தப்படுகிற பரிசுத்த பாத்திரங்கள் திரு இரத்தக் கிண்ணம் (இரசக் கிண்ணம்), அப்பத் தட்டு, மற்றும் திவ்விய நற்கருணைப் பாத்திரம் (அப்பப் பாத்திரம்) ஆகியவை ஆகும். இவற்றின் மூலப் பொருள் மற்றும் வடிவத்தைப்பற்றிய திருச்சபைச் சட்ட விதிமுறைகள் ஒருசில மட்டுமே உள்ளன, ஆனாலும் ஒரு தெள்ளத் தெளிவான வழிபாட்டுப் பாரம்பரியம் திருச்சபையில் உள்ளது; இந்தப் பரிசுத்த பாத்திரங்கள் எதற்குப் பயன்படுத்தப் பட வேண்டும் என்பது, குறைந்த பட்சம் ஓர் எதிர்மறையான விதத்திலாவது, அவற்றின் வடிவத்தைப் பற்றிய பெருமளவு சந்தேகங்களைத் தீர்த்து விடுகிறது.

பரிசுத்த கலைச் சட்டங்களில் முதல் சட்டங்களில் ஒன்று, ஒரு பொருள் முடிந்த வரை அதன் நோக்கத்திற்கு ஏற்றபடி உத்தமமான முறையில் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும்.



### திரு இரத்தக் கிண்ணம்

திரு இரத்தக் கிண்ணம் (இரசக் கிண்ணம்) பொன்னாலோ, அல்லது வெள்ளியாலோ செய்யப்பட வேண்டுமென்று விதிமுறைகள் கூறுகின்றன. அல்லது குறைந்த பட்சம் அதன் கிண்ணப் பகுதியாவது (இது மட்டுமே மந்திரிக்கப்படுகிறது) வெள்ளியால் செய்யப்பட்டு, உட் பக்கத்தில் தங்க முலாம் பூசப்பட்டிருக்க வேண்டும். தகரம் அனுமதிக்கப்படுகிறது, ஆனால் தாமிரமோ, கண்ணாடியோ பயன்படுத்தப்பட அனுமதி யில்லை. இதன் வடிவத்தைப் பொறுத்தவரை, விதிமுறைகள் மற்றும், திருச்சபைப் பாரம்பரியத்தின்படி, பலிக் கிண்ணமானது, கிண்ணப் பகுதி, மத்தியில் ஒரு குமிழ் அல்லது முடிச்சுடன் கூடிய ஒரு தண்டுப் பகுதி, மற்றும் ஒரு அடிப்பகுதி ஆகிய மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது. சேசுநாதருடைய விலைமதியாத திரு இரத்தத்தை முற்றிலும் பாதுகாப்பாக வைத்திருப்பதாகிய அதன் நோக்கத்தை நிறைவேற்ற ஏதுவாகவும், பூசைச் சடங்குகளில் வசதியான முறையில் பயன்படுத்த ஏதுவாகவும், இந்தத் திருப்பாத்திரத்தின் மூன்று பாகங்களும் தயாரிக்கப்பட்டு, ஒன்றாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பொதுவில், திரு இரத்தக் கிண்ணம் பீடத்தின் மீது இருக்கும்போது, அல்லது குருவால் எழுந்தேற்றம் செய்யப்படும்போது, அது கவிழ்ந்து விடும் ஆபத்து இராதபடி அது நல்ல சமநிலை யுள்ளதாக இருக்க வேண்டும். இதற்கு அது மிகவும் எடை குறைந்ததாக இராதிருப்பது அவசியம்; அது மிகப் பாரமாகவும் இருக்கக் கூடாது, ஏனெனில் அப்படியிருந்தால், அதைக் கையாள்வதோ, உயர்த்திப் பிடிப்பதோ கடினமாக இருக்கும். அது அதிக உயரமாகவும் இருக்கக் கூடாது, இல்லாவிடில், அதன்மீது சிலுவை அடையாளங்கள் வரைவதற்கோ, அல்லது ஆடம்பரப் பாடற் பூசைகளில் அதற்குத் தூபம் காட்டுவதற்கோ பூசை நிறைவேற்றும் குருவுக்கு வசதியாக இருக்காது. அது அளவுக்கு மீறி உயரம் குறைந்ததாகவும் இருக்கக் கூடாது. அப்போது அதன் தோற்றத்தில் கம்பீரம் இருக்காது, மேலும் சராசரி அளவுக்கு மூடுதுகில் அதற்குப் பொருந்தவும் செய்யாது. கிண்ணப் பகுதியின் வடிவம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது மிக அகன்றதாகவோ, அளவுக்கு மீறி ஆழமற்ற தாகவோ இருந்தால், அதை எழுந்தேற்றம் செய்யும் போதோ, அல்லது அதிலிருந்து பருகும்போதோ, அல்லது அதை வெறுமையாக்கும்போதோ, திரு இரத்தத் துளிகள் சிந்திவிடும் ஆபத்து உள்ளது, அல்லது அது எதிர்பாராத விதமாக குலுக்கப்பட்டும் விடலாம்; அது அளவுக்கு மீறி ஒடுக்கமாக இருந்தால், பெர் இப்சும் ஜெபத்தின்போது, அதனுள் சிலுவை அடையாளங்கள் வரைவது கடினமாக இருக்கும்; அது அளவுக்கு மீறி ஆழம் உள்ளதாக இருந்தால், அதைச் சுத்திகரித்த பிறகு, அதைத் துடைப்பதற்கு சாத்தியமில்லை. திரு இரத்தம் எதற்கு மேலாகக் கடந்துவருமோ, அந்த திருக்கிண்ணத்தின் விளிம்பில் ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கக் கூடாது. திருச்சட்ட

விதிமுறைகளின்படி பூசை நிறைவேற்றும் குரு பூசையின்போது திரு இரத்தக் கிண்ணத்தை வசதியாகப் பிடித்துக் கொள்ள ஏதுவாக, அப்ப வசீகரத்திற்குப் பிறகு, அவர் முதல் மற்றும் இரண்டாம் விரல்களுக்கு நடுவில் அதைப் பிடித்துக்கொள்ள வேண்டியிருக்கும். தண்டுப் பகுதியிலுள்ள முடிச்சு அல்லது குமிழ் பகுதி, கிண்ணப் பகுதியிலிருந்து, தண்டின் ஒரு பகுதியால் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தக் குமிழ் பகுதி உருண்டையாகவும், வழவழப் பானதாகவும் இருக்கவேண்டும். திரு இரத்தக் கிண்ணம் எளிதில் கவிழ்ந்துவிடாதபடி, கிண்ணத்தின் அடிப்பகுதி போது மான அளவுக்கு எடையுள்ளதாகவும், அகன்றதாகவும் இருக்க வேண்டும், என்றாலும் குறித்த அளவுகளுடன் கூடிய பீடக் கல்லின் மீது அது அளவுக்கு அதிகமான இடத்தை எடுத்துக் கொள்ளாதவாறு, அது அளவுக்கு மீறி அகலமாகவும் இருக்கக் கூடாது. திருக்கிண்ணத்தின் அடிவாரத்தின்மீது நீட்டிக் கொண்டிருக்கிற எந்த விதமான வேலைப்பாடுகளும் தவிர்க்கப் பட வேண்டும். திரு இரத்தக் கிண்ணத்தின் விளிம்பில் எந்தப் பகுதியில் தாம் திரு இரத்தத்தைப் பருகினார் என்று பலி நிறை வேற்றும் குரு அறிந்திருக்குமாறும், கிண்ணத்தைச் சுத்திகரிக்கும் படி அதே இடத்தில் வெறும் இரசத்தையும் தண்ணீரையும் அவர் பெற்றுக் கொள்ள வசதியாகவும், அடிப்பகுதியின்மீது ஒரு சிலுவை தெளிவாகக் குறியிடப்பட்டிருக்க வேண்டும்.

திரு இரத்தக் கிண்ணமானது பயன்படுத்தப்படுவதற்கு முன், ஒரு மேற்றிராணியாரால் அபிஷேகம் செய்யப்பட வேண்டும். அது தனது தொடக்க வடிவத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு அடிபட்டோ, அல்லது மாற்றம் அடைந்து இருந்தாலோ, அல்லது தனது மகத்துவத்திற்குத் தகுதியற்ற நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலோ, அல்லது பொதுவில் விற்பனைக்கு வைக்கப்பட்டுவிட்டாலோ, அது தன் அபிஷேகத்தை இழந்து விடும், இனி அது பூசைக்குப் பயன்படுத்தப்பட முடியாது. இதன் காரணமாக, ஒரு திரு இரத்தக் கிண்ணத்தின் கிண்ணப்பகுதி, நிரந்தரமான முறையில் அது இணைக்கப்பட்டிருந்த அடிப்பகுதியிலிருந்து பிரிக்கப்படு மானால், அப்போது அதன் அபிஷேகம் ஒருவேளை இழக்கப் படலாம். கிண்ணப்பகுதியும், அடிப்பகுதியும் ஒரு திருகு-மறையால் இணைக்கப்பட்டிருந்தால், அது தன் அபிஷேகத்தை இழந்துபோகாது. ஒரு வெள்ளிக் கிண்ணத்தின் கிண்ணப்பகுதி காலப் போக்கில் தனது தங்க முலாமை இழந்துபோகுமானால், அது மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். மறு முலாம் பூசுவதால் அபிஷேகம் இழக்கப்படுவதில்லை.

## அப்பத்தட்டு

அப்பத் தட்டின் மூலப்பொருள் திருச்சட்ட விதிமுறை களில் கூறப்படவில்லை, ஆனாலும் திருச்சபையின் பாரம்பரியப்படி, அது திரு இரத்தக் கிண்ணத்தைப் போல பொன்னாலோ, வெள்ளியாலோ செய்யப் பட்டதாக இருக்கவேண்டும். அது வெள்ளியால் செய்யப்பட்டதாக இருந்தால், அதன் வளைவான உட்பரப்பு முழுவதும் பொன் முலாம் பூசப்பட்டிருக்கவேண்டும். அது வட்ட வடிவமாக இருக்கவேண்டும், திருக் கிண்ணத்தின் வாய்ப்பகுதிக்குள் உறுதியாகப் பொருந்தும் விதத்தில் (உதாரணமாக, ஒரு புடைப்பான வட்டம்) அது செய்யப்படவேண்டும். அதன் வெளிப்பரப்பில் வேலைப்பாடுகள் (உதாரணமாக புடைப்பு மற்றும் செதுக்குவேலைகள் செய்யப்படுதல்) இருக்கக்கூடிய அதே வேளையில், அதன் உள்பரப்பில் அது முற்றிலும் வேலைப்பாடுகள் இல்லாமல் வெறுமையாக இருக்க



வேண்டும். பலி நிறைவேற்றும் குரு கர்த்தர் கற்பித்த ஜெபத்தைத் தொடர்ந்துவரும் ஜெபத்தில் அப்பத் தட்டை முத்தமிடும்போது, தேவ அப்பத்தால் தொடப்பட்டிருந்த பாகத்தை அவர் தொடாமல் தவிர்க்கும்படியாக, அப்பத் தட்டின் விளிம்பில் ஏதாவது ஓரிடத்தில் ஒரு சிறு சிலுவை குறியிடப்பட்டிருப்பது பயனுள்ளது. திருமேனித் துகிலின் சுத்திகரிப்பின்போது, திரு அப்பத் துணிக்கைகளைக் குரு வானவர் சேகரிப்பதற்கு வசதியாக அப்பத் தட்டின் விளிம்பு மெல்லியதாக இருக்க வேண்டும், ஆனால் கூர்மையாக இருக்கக் கூடாது. அப்பத் தட்டின் அளவு, திரு இரத்தக் கிண்ணத்தின் கிண்ணப் பகுதியின் விட்டத்திற்குத் தக்க அளவில், அதைவிட சற்று விரிவானதாக இருக்கவேண்டும். சில சமயங்களில் திவ்விய நன்மை வழங்குவதற்காக அப்பத்தட்டின்மீது அப்பங்கள் வைக்கப்படுகின்றன என்பதால், அது அளவில் மிகச் சிறியதாக இருக்கக்கூடாது; அதே வேளையில், குருவானவர் ஒப்புக் கொடுத்தல் பகுதியில் அப்பத்தை ஒப்புக்கொடுக்கும்போது, அதன் விளிம்பைச் சுற்றிப் பிடித்துக்கொள்கிறார் என்பதால், அதன் விட்டம் அளவுக்கு மீறியதாகவும் இருக்கக்கூடாது. அப்பத் தட்டு அதிக பாரமானதாக இருந்தால், அதைக் கையாள்வது குருவானவருக்குச் சிரமமாக இருக்கும்.

## நற்கருணைப் பாத்திரம் (அப்பப் பாத்திரம்)


திருச்சடங்கு விதிமுறைகளின்படி, நற்கருணைப் பாத்திரம் திடமான, தகுதியுள்ள மூலப் பொருளால் செய்யப் பட்டதாக இருக்கவேண்டும். இது வழக்கமாக பொன் அல்லது வெள்ளியில் செய்யப்படுகிறது. இந்த உலோகங்களைப் பற்றித்தான் "சேரேமோனியாலே எப்பிஸ்கோப்போரும்" பேசுகிறது. மற்ற உலோகங்கள், உதாரணமாக தாமிரம், அனுமதிக்கப்படலாம். ஆனாலும் உட்புறம் எப்போதும் பொன்முலாம் பூசப்பட் டிருக்க வேண்டும். வழிபாட்டுப் பாரம்பரியத் தின்படி, நற்கருணைப் பாத்திரத்தின் வடிவம் திரு இரத்தக் கிண்ணத்தின் வடிவத்திற்கு ஒப்பானதாக (கிண்ணப் பகுதி, குமிழுடன் கூடிய தண்டுப் பகுதி மற்றும் அடிப்பகுதி ஆகியவை) இருக்கிறது. ஆனாலும் கிண்ணப்பகுதி பெரிதாகவும், வடிவத்தில் சற்று மாறுபட்டதாகவும் இருக்கிறது. நற்கருணைப் பாத்திரத்திற்கு மூடி உண்டு. இது அதிக இறுக்கமானதாக இல்லாமல் எளிதில் திறந்து மூடக்கூடிய தாகவும், வெளிப் பக்கமாகக் குவிந்ததாகவும், தூசி, ஈரம்



முதலியவை நற்கருணைப் பாத்திரத்தில் புகாதபடி நன்கு பொருந்துவதாகவும் இருக்க வேண்டும். மூடியைச் சிரமப்பட்டு இழுத்துத் திறந்தால், திவ்விய அப்பங்கள் சிதறி விழுந்து விட நேரிடும் என்பதால், இது அளவுக்கு மீறி இறுக்கமாகப் பொருந்தியிருக்கக்கூடாது. கடைசி நற்கருணை அப்பங்கள் எளிதாக எடுக்கப்பட ஏதுவாக, கிண்ணப் பகுதியின் அடிப்பாகம் சற்று மேடாக இருக்க வேண்டும். குருவானவர் பூசையில் திவ்விய நன்மை கொடுக்கும் போது, தாம் இணைத்து வைத்திருக்கும் பெருவிரல் மற்றும் ஆட்காட்டி விரலுக்கும், இரண்டாவது விரலுக்கும் இடையில், தண்டுப்பகுதியிலுள்ள குமிழில் நற்கருணைப் பாத்திரத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியுள்ளது என்பதால், இந்தக் குமிழ் முடிந்தவரை வழவழப்பானதாக இருக்கவேண்டும். திவ்விய நற்கருணைப் பாத்திரத்தின் அளவு அது பயன்படுத்தப்படுகிற தேவாலயத்தின் தேவையைப் பொறுத்ததாக இருக்கும். ஆனாலும் சுத்திகரிக்கக் கடினமாயிராதபடி அது அதிகப் பெரிய தாக இருக்கக்கூடாது, விசேஷமாக அநேகர் திவ்விய நன்மைவாங்கும்போது, அதைச் சுமந்துகொண்டிருப்பது சோர்வூட்டுவதாக இராதபடி, அது அதிக பாரமானதாகவும் இருக்கக் கூடாது.

நற்கருணைப் பாத்திரத்தில் திவ்விய அப்பங் களை வைப்பதற்குமுன் அது மந்திரிக்கப்பட வேண்டும். இந்த மந்திரிப்புக்குரிய ஜெபம், உரோமை திருச்சடங்குப் புத்தகத்திலுள்ள 'பெனதிக்ஷியோ தாபர்னாக்குலி' என்ற ஜெபமாகும். நற்கருணைப் பாத்திரம் மறுமுலாம் பூசப்படும்போது அது தன் மந்திரிப்பை இழந்து விடாது.

நற்கருணைப் பாத்திரம் திவ்விய நற்கருணையைக் கொண்டிருக்கும்போது, அது பொருத்தமான முறையில் அலங்கார வேலை செய்யப்பட்டுள்ள வெண்பட்டினாலான மூடுதுகில் ஒன்றால் மூடப்பட்டிருக்க வேண்டும். அது திவ்விய சற்பிரசாதத்தைக் கொண்டிராவிட்டாலும், எல்லோரும் பார்க்கும்படியாக, பயன்படுத்தப்படாமல் இருக்கும்போதும் கூட, (உதாரணமாக, தனது சுத்திகரிப்பிற்குப் பிறகு பீடத்தின் மீது தேவ வசீகரத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கும் வேளையில்) திருச்சடங்கு விதிகள் திரு இரத்தக் கிண்ணத்திற்கும், அப்பத்தட்டுக்கும், கதிர்ப் பாத்திரத்திற்கும் பரிந்துரைப்பது போலவே, நற்கருணைப் பாத்திரமும் மூடுதுகிலால் மூடப்பட்டிருக்க வேண்டும்.



## ஆண்டவருக்கு நன்றி

**கடந்த 2-ம் தேதி (2.12.2012) மேன்மை தங்கிய கர்தினால் அமட்டோ SDB ஆண்டகையவர்கள் வேதசாட்சி தேவசகாயம் பிள்ளைக்கு முத்திப்பேறு பட்டம் வழங்கினார். இத் திருச்சடங்கு நாகர்கோவிலில் நடைபெற்றது. அவருக்கு அர்ச்சிஷ்டப் பட்டமும் விரைவில் உரிய முறையில் கிடைத்திட நம் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துவை மன்றாடுவோம்.**

**ஆண்டவர் அவரது மக்களுக்கு அளிக்கும் வரங்களுக்காக நன்றி கூறுவோம்.**

# இரு உரோமை வேதசாட்சிகள்

சங். M.J. மிக்கேல் சுவாமிகள்

## அர்ச். செபஸ்தியார்

**வேதசாட்சி (கி.பி. 288)**

செபஸ்தியார் பிரான்ஸ் தேசத்தில் பிறந்து, இத்தாலியா தேசத்தில் வளர்ந்து கல்வி சாஸ்திரங்களைப் படித்தார். இவர் காலத்தில் வேதத்தினிமித்தம் கணக்கில்லாத கிறீஸ்தவர்கள் சித்திரவதை செய்து கொல்லப்படுவதைக் கண்ட இவர், அவர்களுக்குத் தன்னால் முடிந்த வரையில் உதவி செய்யும் பொருட்டு படையில் போர்ச்சேவகனாக சேர்ந்தார். அவருடைய தளராத தைரியத்தைக் கண்ட சக்கரவர்த்தி அவருக்குப் படையில் உயர்ந்த பதவியைக் கொடுத்தான். ஒருநாள் வேதத்தினிமித்தம் சிறையில் அடைக்கப்பட்ட மார்க்குஸ், மார்செல்லினுஸ் என்னும் இரு சகோதரருக்கு, அவர்களுடைய பெற்றோரும், உறவினர்களும் வேதத்தை மறுதலித்து சிறையிலிருந்து விடுதலையாகும்படி துர் ஆலோசனைக் கொடுப்பதை கண்ட செபஸ்தியார், அவர்கள் இருவரையும் தம்முடைய நற்புத்தியால் விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். இதைக் கண்ட அநேகர் தாங்களும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து வேதசாட்சி முடி பெற்றார்கள். கணக்கில்லாத அஞ்ஞானிகள் வேதத்தில் சேர்ந்தார்கள். மேலும் இவர் சிலுவை அடையாளத்தால் அநேக வியாதியஸ்தரைக் குணப் படுத்தினார். கடைசியாய் இவர் வேதத்திற்காகப் பிடிபட்டு, சக்கரவர்த்தியின் கட்டளைப்படி அம்பால் எய்துக் கொல்லப்பட்டார். கிறீஸ்தவர்கள் இவர் சரீரத்தை எடுத்து அடக்கம் செய்ய முயற்சிக்கும்போது, இவருக்கு கொஞ்சம் உயிர் இருப்பதைக் கண்டு, இவரைக் கவனமாய்ப் பராமரித்தார்கள். இவர் விரைவில் பூரண சுகத்தை அடைந்தார். பிறகு இவர் இராயனுடைய அரண்மனைக்குச் சென்று, இராயனிடம் கிறீஸ்தவர்களை துன்புறுத்தக்கூடாது என்று தைரியத்துடன் புத்திமதி சொன்னார். இதைக் கேட்ட அந்தக் கொடுங்கோலன், கோபத்தால் பொங்கியெழுந்து அவரைத் தடிகளால் அடித்துக் கொல்லும்படிக் கட்டளையிட்டான். அவரும் அவ்வாறே தடிகளால் அடிக்கப்பட்டு, மரணமடைந்து வேதசாட்சியானார்.

**(திருநாள்: ஜனவரி 20)**




## அர்ச். ஆக்னேஸம்மாள்

**கன்னிகை. வேதசாட்சி (கி.பி. 304)**

ஆக்னேஸம்மாள் உரோமையில் பிறந்து சிறு வயதிலேயே தன் கன்னிமையை சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடுத்தாள். இவளுடைய உயர்குலப் பிறப்பையும், அழகையும், திரண்ட செல்வத்தையும் பார்த்து பிரபுக்களான அநேக வாலிபர் அவளை மணமுடித்துக்கொள்ள விரும்பியபோது, "என் கன்னிமையை என் தேவ பத்தாவுக்கு ஒப்புக்கொடுத்தேன்" என்று அம்மாது கூறியதை அவர்கள் கேட்டு சினங்கொண்டு அவள் கிறீஸ்தவளென்று நியாயாதிபதிக்கு அறிவித்தார்கள். நியாயாதிபதி ஆக்னேஸுக்கு நய பயத்தைக் காட்டி கிறீஸ்தவ வேதத்தை அவள் மறுதலிக்கும்படி கட்டாயப்படுத்தினான். அந்தப் பெண்மணி அதற்கு சம்மதியாதிருப்பதை அவன் கண்டு, அவள் கண்ணுக்கு முன் நெருப்பை மூட்டி, ஆணி, குரடு முதலிய ஆயுதங்களைப் பழுக்கக் காய்ச்சும்படி கட்டளையிட்டான். வேதசாட்சியோ அவைகளைக் கண்டு சற்றும் கலங்காதிருப்பதை அவன் கண்டு, அவளை அஞ்ஞான கோவிலுக்கு இழுத்துக்கொண்டு போய் பொய்த் தேவர்களுக்குச் சாம்பிராணி புகைக்கும்படி கட்டளையிட்டான். அவளோ தன்மேல் சிலுவை வரைந்து கொண்டாளேயன்றி, சாம்பிராணியைத் தொடவில்லை. இதனால் அதிகாரி கோப வெறிகொண்டு, அவளை ஒரு விலைமாதர் வீட்டிற்கு இழுத்துக் கொண்டுபோய் அங்கே அவள் கற்பையழிக்கும்படி உத்தரவிட்டான். அப்போது அநேக வாலிபர் அவளைப் பின் தொடர்ந்தும் ஒருவித பயத்தால் பின்னடைந்தார்கள். ஆனால் ஒருவன் மாத்திரம் அவளை அணுகின மாத்திரத்தில் மின்னலைப் போன்ற ஒருவிதப் பிரகாசமான சக்தியால் குருடனாகி, கீழே விழுந்தான். அவனுடைய தோழரின் மன்றாட்டின் பேரில் ஆக்னேஸ் அவனுக்குப் பார்வைக் கொடுத்தாள். இதையெல்லாம் கண்ட அதிகாரி வெட்கமும் சினமுங்கொண்டு, அவளைச் சிரச்சேதம் பண்ணும்படி கட்டளையிட, ஆக்னேஸ் தலை வெட்டுண்டு, கன்னிமை முடியும், வேதசாட்சி முடியும் பெற்று தன் தேவ பத்தாவிடஞ் சென்றாள்.

**(திருநாள்: ஜனவரி 21)**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!



### கன்னியர்களுடைய இராக்கினியே
### எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !

மெய்விவாக அந்தஸ்திலிருந்துகொண்டு சரீர இன்பங்களை அனுபவிக்க ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இவர்கள் சம்சாரிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். திருச்சபையில் மெய்விவாகத்தால் தங்களை உட்படுத்திக்கொண்டவர்கள் இவர்களே. ஆனால் சர்வேசுரன் மேல் வைத்த நேசத்தால் இவ்வுரிமையை உதறித் தள்ளிவிட்டு தனி வாழ்க்கை நடத்துபவர்கள் "**கன்னியர்**" எனப்படுவர். கன்னியர் என்னும் சொல், மடங்களில் வாழும் துறவறப் பெண்களை முக்கியமாகக் குறிப்பிட்டாலும், துறவற அந்தஸ்திலுள்ள குருக்களையும், சந்நியாசிகளையும் குறிக்கும் என்பதை நாம் உணரவேண்டும்.

திருச்சபையில் எத்தனையோ ஆண்களும், பெண்களும் உலகையும் சரீர இன்பங்களையும் துறந்து கன்னியர்களாய் தங்கள் கற்பைப் பழுதறக் காத்துவருகின்றனர். இதைக் கண்டு பிறமதத்தினர் வியப்படைகின்றனர். மனித சுபாவத்திற்கு கடினமான இந்த அந்தஸ்தை தெரிந்து கொள்ளுமாறு அவர்களைத் தூண்டுவது, தேவசிநேகமும், மாமரி காட்டிய நன் முன்மாதிரிகையுமேயாகும். ஏனெனில் தேவதாய் உத்தம அர்ச்சியசிஷ்ட கன்னிகையாகவும், பழுதற்ற கன்னிகையாகவுமிருக்கிறார்கள். அவர்களே கன்னியர்களுக்கெல்லாம் மேல்வரிச்சட்டமாகவும், பாதுகாவலுமாய் இருக்கிறார்கள். அதனால்தான் திருச்சபை கன்னிமாமரியை "கன்னியர்களுடைய இராக்கினி" என்று ஏற்றிப்போற்றி மகிழ்கின்றது. தேவ கன்னிகை கன்னியர்களுக்கெல்லாம் எங்ஙனம் உயர்ந்துள்ளார்கள் என்பதை சிறிது காண்போம்.

### உத்தம அர்ச்சியசிஷ்ட கன்னிகை தேவ அன்னை !

பெண் குலத்திலுதித்தவரில் முதன்முதல் தன் கன்னிமையை முற்றும் சர்வேசுரனுக்கு அர்ப்பணம் செய்தவர் தேவ அன்னையே! தேவமாதாவுக்கு முன் வாழ்ந்த யூதப் பெண்களில் எவரேனும் இவ்வித காணிக்கையை கனவிலும் நினைக்கவில்லை. இளமை முதல் கட்டுப்பாடு என்னும் காவலின் கீழ் தன் கற்பைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தவர்கள் பரி. கன்னி மரியாயே. எனவே அவர்களை "கற்பின் அரசி" என்று அழைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். தேவதாய் தனது கற்பை சகலத்திற்கும் மேலாக மதித்தார்கள். கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை கூறியபோது, கன்னிமாமரி சர்வேசுரனுக்கு தனது கற்பை நித்திய காணிக்கையாக வழங்கிவிட்டதையும், அதற்கு பங்கம் வந்துவிடுமோ என்றுதான் கலங்கினார்கள். ஆனால் தன் கன்னிமைக்கு அற்பமேனும் பழுது ஏற்படாது என்று அறிவித்தவுடன் "...இதோ நான் ஆண்டவருடைய அடிமை; உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" (லூக். 1:38) என்று கூறி தமது முழு சம்மதத்தை அறிவித்தார்கள். அக்கணமே இஸ்பிரீத்துசாந்துவின் வல்லமையால், அற்புதமாய் நமதாண்டவர் அவர்களது உதரத்தில் மனுவுருவெடுத்தார். ஆக தேவ அன்னை சேசுவை கர்ப்பந் தரிக்கும் முன்பும், அவரைப் பெற்றெடுத்தபொழுதும், பெற்றெடுத்தப் பின்பும் தன் கன்னிமையைக் களங்கமின்றி, காப்பாற்றி நித்திய கன்னிகையாகத் திகழ்கின்றார்கள். ஆகவேதான், சத்திய திருச்சபை தேவ அன்னையை "எல்லா கன்னியர்களுக்கும் இராக்கினியே!" என்று அழைக்கிறது.

### பழுதற்ற கன்னிகை தேவ அன்னை !

கற்பெனும் புண்ணியம் *(chastity)* சர்வேசுரனுக்கு பிரியமான புண்ணியம். ஆயினும் அதைவிட அவருக்குப் பிரியமானது கன்னிமைத்தனமே *(virginity)*, கன்னிமை நிலையில் கற்பும் கலந்திருப்பதால், அந்நிலை மிக மேன்மையடைகிறது. கற்பை அநுசரிக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர். அது தேவ கட்டளை! ஆனால் கன்னிமையை அநுசரிக்கவேண்டும் என்பது தேவ கட்டளை அல்ல. கன்னிமை நிலையை மேற்கொள்ளுதல் வீரம் பொருந்திய ஒரு தியாகம், தியாகங்களில் தலைசிறந்த தியாகம். இதற்கு சர்வேசுரனின் விசேஷ அழைத்தலும், உதவியும் தேவை. மெய்விவாக அந்தஸ்தை தெரிந்துகொண்டு மக்கட்பேறு பெறும் யாவரும் தங்கள் கன்னிமையை இழந்துவிடுகின்றனர். ஆயினும் அவர்களும் கற்புள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால் தேவ அன்னை ஏக காலத்தில் அன்னையும், கன்னியுமாக இருக்கிறார்கள். தன் கன்னிமையை இழக்காமலேயே தாயாகும் பாக்கியம் பெற்ற மாது அவர்கள் மட்டுமே. ஆகவேதான் திருச்சபை பழுதற்ற கன்னிகை என்று வர்ணித்து, கன்னியர்களின் இராக்கினியே என்று போற்றித் துதித்துப் பிரார்த்திக்கிறது. நாமும் திருச்சபையோடு சேர்ந்து தேவ அன்னையை **கன்னியர்களுடைய இராக்கினியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !** என்று மன்றாடுவோமாக.



# லூர்துமாதா திருநாள்

*(பெப்ருவரி – 11)*

- சங். **J.M.** நிக்கொலாஸ் சுவாமி

பெர்நதெத் சூபிரூ என்பவள் ஏழை பெற்றோரிடம் பிறந்தவள். அவளுக்கு வயது பதினான்கு. நேர்மையானவள், கீழ்ப்படிந்து நடப்பவள், தன் வாழ்நாளில் மனது பொருந்தி அற்பப் பாவமே செய்யா தவள். அவளுக்கு ஜெபம் என்றால் அதிக பிரியம். வயல் வெளிகளில் அடிக்கடி ஜெபமாலை ஜெபிப்பாள்.

*1858-ம்* ஆண்டு பெப்ருவரி *11-ம்* நாளன்று பெர்நதெத், அவளுடைய சகோதரி அந்துவானெற், ஜோன் அபதி என்னும் சிநேகிதி, இம்மூவரும் ஒரு குறுகிய ஓடைப்பக்கம் நடந்துகொண்டிருந்தனர். ஓடையின் அகலம் முப்பது அல்லது நாற்பது அடி இருக்கும். அன்று வெகு குளிராயிருந்தது. அவர்கள் மூவரும் விறகு பொறுக்கிக்கொண் டிருந்தனர். ஓடையின் இடதுபக்கமாக அவர்கள் நடந்து சென்று மஸபியேல் கெபிக்கு எதிராக வந்தார்கள். காலணி களையும், கால் உறைகளையும் கழற்றிவிட்டு தண்ணீரில் நடந்து ஓடையின் மறுபக்கத்தையடைந்து விறகு பொறுக்குவோம் என பெண்களில் ஒருத்தி கூறினாள். குளிர்ந்த நீரில் நடந்தால் தனக்கு இளைப்பு வியாதி வரும் என பெர்நதெத் அஞ்சி, ஜோனை நோக்கி, "என்னை உன் தோளில் வைத்து தூக்கிக் கொண்டு போ" என்றனள். "உனக்கு வரப்பிரியமில்லை யானால் இங்கேயே இருந்துகொள்" என அவள் சொல்லி விட்டாள். பெர்நதெத்தைத் தனியே விட்டுவிட்டு இருவரும் மறுபக்கம் சென்றனர்.

பெர்நதெத் தன் காலுறையைக் கழற்ற ஆரம்பிக்கையில், புயல் வீசுவதுபோல் பெரும் சத்தம் கேட்டது. பெர்நதெத் அங்கு மிங்கும் பார்த்தாள். ஒன்றையும் காணோம். சிறிது நேரம் கழித்து முன்போல் அதே சத்தம் கேட்டது. பெர்நதெத் பயந்து நிமிர்ந்து நின்று மஸபியேல் கெபிப்பக்கம் திரும்பினாள். குகையினுள்ளிருந்து தங்க நிறமான மேகம் ஒன்று வெளிவந்தது. அதற்குப்பின் ஒரு பெண் காணப்பட்டாள். வாலிபப் பெண், மிக அழகுடனிருந்தாள். "அவள் என்னைத் தாயன்புடன் நோக்கி, புன்சிரிப்புக் காண்பித்து, வரும்படி எனக்கு சயிக்கினை காட்டினாள். பயம் என்னை விட்டகன்றது. கண்களைக் கசக்கி மூடித் திறந்தேன். அந்தப் பெண் அதே இடத்தில் இன்னும் புன்முறுவலுடன் நின்றாள். என்னையறியாமலே ஜெபமாலையைக் கையில் எடுத்து முழந்தாளிட்டேன். இது தனக்குப் பிரியம் எனத் தெரிவிக்குமாப்போல் அந்தப் பெண் தலையை அசைத்து, தன் வலது கையில் தொங்கிய ஜெபமாலையை எடுத்தாள். ஜெபமாலை தொடங்குமுன் சிலுவை அடையாளம் வரையவேண்டும். வலது கரத்தால் நெற்றியைத் தொட முயன்றேன். கையை உயர்த்த முடிய வில்லை. திமிர்வாதம் போல் இருந்தது. அந்தப் பெண் சிலுவை அடையாளம் வரைந்த பின்னரே, நான் என் கையை உயர்த்தக் கூடியவளானேன். நான் தனியே ஜெபமாலை செய்தேன். அவள் மணிகளை உருட்டிக்கொண்டிருந்தாள், ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. பத்துமணி ஜெபத்துக்குப்பின் என்னுடன் சேர்ந்து, "பிதாவுக்கும் சுதனுக்கும்" என்ற திரித்துவ ஆராதனையைச் சொன்னாள். ஜெபமாலை முடிந்ததும், அவள் குகையினுள் திரும்பினாள். அவளுடன் பொன் நிற மேகமும் மறைந்தது. அவளுக்கு வயது பதினாறு அல்லது பதினேழு இருக்கும்."

பெர்நதெத் ஜெபித்துக்கொண்டிருப்பதை அந்துவா-னெற்றும் ஜோனும் பார்த்தனர். "அங்கு ஜெபித்துக்கொண் டிருக்கும் அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். கோவிலில் அநேக ஜெபங்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. அது பற்றாதா? ஜெபிப்பதைத் தவிர வேறு எதற்கும் அவள் உதவ மாட்டாள்" என ஜோன் கூறினாள்.

விறகு பொறுக்கிவிட்டு பெண்கள் இருவரும் கெபிப் பக்கமாய்த் திரும்பினர். பெர்நதெத் இன்னும் ஜெபித்துக் கொண்டிருந்தாள். மும்முறை அவளை அழைத்தார்கள், அவள் பதிலளிக்கவில்லை. கல் எறிந்தார்கள். ஒரு கல் அவள் தோள் மேல் அடித்தது. அதற்கும் அவள் அசையவில்லை. அவள் செத்துப்போனாளோ என அந்துவானெற் அஞ்சினாள். "செத்துப்போனாள் கீழே விழுந்திருப்பாளே" என ஜோன் சொல்லி அவளுடைய பயத்தை அகற்றினாள். அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையில் பெர்நதெத் திடீரென பரவசத்தைவிட்டு விழித்தாள்.

வீட்டுக்குப் போகும் வழியில், தான் ஒரு பெண்ணைப் பார்த்ததாகவும், அவள் வெள்ளையும் நீலமும் கலந்த நிறத்தில் உடை தரித்திருந்தாளென்றும், ஒவ்வொரு பாதத்தின் கீழும் ஒரு மஞ்சள் ரோஜா மலர் இருந்ததென்றும், பெர்நதெத் அறிவித்தாள். யாருமே இதை நம்பவில்லை.

இன்னொரு நாள் பெர்நதெத் தன் சிநேகிதிகளுடனும் இன்னும் இருபது சிறுவர்களுடனும் மஸபியேல் கெபியருகே நிற்கையில் அந்தப் பெண் தோன்றினாள். பெர்நதெத் கெபியில் தீர்த்தத்தைத் தெளித்தாள். உடனே அந்தப் பெண் புன்முறுவல் பூத்தாள்.

அந்தப் பெண் யாராயிருக்கலாமென பலர் பலவிதமாய் பேசினார்கள். உதவி கேட்டு உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து வந்த ஆத்துமம் என சிலர் நினைத்தார்கள். இவ்விதம் நினைத்தவர் களில் ஒருவர், பெர்நதெத்தைப் பார்த்து "அடுத்த முறை அந்தப் பெண் வந்ததும் அவளுக்கு பேனா, மை, காகிதம் இவற்றைக் கொடுத்து, அவளுடைய விருப்பத்தை எழுதும்படி கேள். தான் வருவதன் நோக்கத்தையாவது எழுதட்டும்" என்றார். பெர்நதெத் அவ்விதமே செய்தாள்.

அந்தப் பெண் சிரித்துக்கொண்டு "நான் சொல்ல இருக்கும் செய்தியை எழுத அவசியமில்லை. இங்கு தொடர்ந்து பதினைந்து நாட்களாக ஒவ்வொரு நாளும் வருவாயா? என்றனள். பெர்நதெத் சரி என்றதும், அந்தப் பெண் இந்த உலகத்திலல்ல, ஆனால் மறு உலகத்தில் உன்னை நான் பாக்கியவதியாக்குவதாக வாக்களிக்கிறேன்" என்றாள்.

1858-ம் ஆண்டு தபசுகாலத்தில் முதல் ஞாயிறன்று மாதா ஆறாவது முறையாகக் காட்சியளித்தாள். பெர்நதெத்-திடமிருந்து தன் பார்வையை அவள் அகற்றி கூட்டத்திலிருந்த ஒவ்வொருவருடைய முகத்தையும் நோக்கினாள். உடனே மாதாவின் முகத்தில் துயர் பரவியது. திரும்பவும் பெர்ந-தெத்தை நோக்கி "பாவிகளுக்காக ஜெபி" என முறையிடுகிறாற் போல் மொழிந்தாள்.

பெப்ருவரி 25-ம் நாள் வியாழக்கிழமை ஒன்பதாவது காட்சி. போய் ஊற்று நீரில் கழுவி அதைப் பருகும்படி தேவதாய் பெர்நதெத்திடம் சொன்னாள். அங்கு ஊற்று ஒன்றும் கிடையாது. ஊற்று அகப்படுமா எனத்தேடிப் பார்த்தாள், ஒன்றும் அகப்படவில்லை.

ஆதலின் அவள் கெபிப் பக்கமாய்த் திரும்பி அன்னை மொழிந்த வார்த்தைகளின் அர்த்தத்தைக் கேட்டாள். அந்தப் பெண் பதிலளிக்கவில்லை. பெர்நதெத் கெபியின் பின்பக்க மாய் ஏறி முழந்தாளிட்டு மணல் கிடந்த ஓர் இடத்தில் தன் கைகளால் ஒரு பள்ளத்தைத் தோண்டினாள். அதுவரை அங்கு ஊற்று கிடையாது. பெர்நதெத் தோண்டியதும் சிறிது தண்ணீர் வந்தது.

கழுவவேண்டும், குடிக்கவேண்டும் என மாதா சொல்லி இருந்ததால், மண் கலந்திருந்த அந்த நீரை எடுத்து பெர்நதெத் தன் முகத்தில் பூசி, ஊற்றிலிருந்து வந்த நீரை மண்ணோடு குடித்தாள். இன்னொரு விசுவாச முயற்சியையும், தாழ்ச்சி யையும் தேவதாய் கேட்டாள். அருகிலிருந்த சில இலைகளைச் சாப்பிடும்படி தேவதாய் சொன்னதும் பெர்நதெத் அவ்விதமே செய்தாள்.

இந்த நிலையில் அவள் தன் பழைய இடத்திற்கு வருவதைக் கண்ட மக்களில், விசுவாசிகள் விசனித்தார்கள். அவிசுவாசிகள் சத்தமாய்க் கேலி செய்தார்கள். பின் பெர்நதெத் தன் முகத்தைக் கழுவிகொண்டு மாதாவை நோக்கலானாள்.

அந்த அற்புத ஊற்று சீக்கிரம் உலகப் பிரசித்தி யடைந்தது. மறுநாளே அந்த ஊற்று நீர் பெருக்கெடுத்து கேவ் நதியில் போய் விழத் தொடங்கியது. லூயி பூரியெட் என்னும் கல்வெட்டும் குருடன் அந்த ஊற்று நீரில் தன் கண்களைக் கழுவினான், உடனே கண் பார்வை பெற்றான். இதுவே லூர்து நாயகியின் முதற் புதுமை. வைத்தியர்களால் பிழைக்காது என்று கைவிடப்பட்ட ஒரு குழந்தையை அதன் தாய், ஊற்று நீரில் குளிப்பாட்டினாள். குழந்தை உடனே முழுச் சுகமும் பலமும் பெற்றது, மக்களின் அவிசுவாசம் அகன்றது.

"பாவிகளுக்காக" இன்னொரு தாழ்ச்சி முயற்சியும் தபசு முயற்சியும் செய்யும்படி தேவதாய் பெப்ருவரி 26-ம் நாளன்று, அதாவது பத்தாவது காட்சியில் அறிவித்து, "தவம்!, தவம்!, தவம்!" என்றாள். "பாவிகளுக்காகத் தரையை முத்தி செய்" என அன்னை கூறியதும், பெர்நதெத் அவ்விதமே செய் தாள். ஆற்றை நோக்கி வந்த சரிவில் கெபியின் முன் முழந்தா ளிட்டு அப்படியே நகர்ந்து தரையை முத்தமிட்டுக்கொண்டே உயர ஏறினாள். மக்களும் அவளைப் பின்பற்றி தரையை முத்தி செய்தார்கள். அவள் சயிக்கினை காட்டியதும் அநேகர் முழந்தா ளிட்டு பாவிகளுக்காக தரையை முத்தி செய்துகொண்டே உயர ஏறினார்கள். இவ்விதம் பலமுறை நடந்தது.


பதினோராவது முறையாக காட்சியளிக்கையில் அந்தப் பெண் "குருக்களிடம் போய், இங்கு எனக்கு ஒரு கோவில் கட்டச்சொல்" என்றாள்.

பெர்நதெத் போன சமயத்தில், பங்குக் குருவான பெரமால் சுவாமியார் தோட்டத்தில் கட்டளை ஜெபங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். தோட்ட வாசலைத் திறந்த சத்தம் கேட்டதும் ஏறெடுத்துப் பார்த்து, "யார்? என்ன வேண்டும்?" என்றார்.

"நான் பெர்நதெத் சூபிரு" என அவள் கூறியதும், அவர் அவளை உச்சிமுதல் பாதம்வரை நோக்கிவிட்டு, "ஓ நீயா அந்த சிறுமி? உன்னைப்பற்றி பல அபூர்வக் கதைகளைக் கேட்டு இருக்கிறேன். உள்ளே வா" என்றார்.

தான் வந்த நோக்கத்தை பெர்நதெத் அறிவித்தாள். அவளிடம் அவர் பல கேள்விகள் கேட்க, யாவற்றிற்கும் அவள் தக்க பதிலளித்தாள். விசாரணை முடிந்ததும் அவர் எழுந்து அறையில் அங்குமிங்கும் உலாவியபின், பெர்நதெத்தின் முன் நின்று, "உன்னை அனுப்பிய அந்த அழகிய பெண்ணிடம் பின்வருமாறு சொல்: "தான் அறியாதவர்களுடன் ஒன்றும் வைத்துக்கொள்ள பங்கு சுவாமி விரும்புவதில்லை; எல்லாவற் றிற்கும் முன் அவள் தன் பெயரைச் சொல்லவேண்டும்; கோவில் கட்ட தனக்கு உரிமை உண்டென அவள் எண்பிக்க வேண்டும்; கோவில் கட்டப்பட அவளுக்கு உரிமை உண்டானால், நான் சொல்வதன் பொருள் அவளுக்கு விளங்கும். அவளுக்கு விளங் காவிட்டால் பங்குக் குருவுக்கு இனிமேலாக செய்தி சொல்லி அனுப்பலாகாது என அவளிடம் சொல்" என்றார்.

மார்ச் 2-ம் நாள் பதினான்காம் முறையாக அந்தப் பெண் தோன்றினாள். கோவில் கட்டப்பட வேண்டும் என்ற துடன் சுற்றுப்பிரகாரங்கள் அங்கு வர தான் விரும்புவதாக அவள் தெரிவித்தாள்.




**லூர்து மாதா காட்சி தந்த மஸபியேல் கெபி**

இன்னொரு முறை பெர்நதெத் பங்குக் குருவை அணுகினாள். இம்முறை அவர் கோபித்தார். “நீ பொய் சொல்கிறாய். அவளுக்காக எப்படி நாம் சுற்றுப்பிரகாரங்களை நடத்துவது? உன்னைப்போன்றவர்களை லூர்து நகரில் வைத்திருப்பதே துன்பம். பட்டணத்தையே நீ குழப்பிவிடுகிறாய். மக்கள் உன் பின் ஓடும்படி செய்கிறாய். உனக்கு ஒரு மெழுகுதிரி தருகிறேன். நீயே சுற்றுப்பிரகாரமாயிரு. அவர்கள் உன்னைப் பின்செல்வார்கள். குருக்கள் தேவையில்லை” என்றார்.

“நான் எவரையும் என் பின் வரும்படிச் சொல்லவில்லை. அவர்கள் தாமாக வருகிறார்கள். சுற்றுப் பிரகாரங்களைப்பற்றி அந்தப் பெண் கேட்டதை நான் எவரிடமும் சொல்லவில்லை; உங்களிடம் மாத்திரமே சொல்லியிருக்கிறேன்” என பெர்நதெத் மொழிந்ததும், அவர் பெர்நதெத் பக்கமாய்த் திரும்பி, “நீ ஒன்றையும் பார்க்கவில்லையா? குகையிலிருந்து ஒரு பெண் வர முடியாது. அவளுடைய பெயர் உனக்குத் தெரியாது. அப்படியானால் அங்கு ஒன்றும் இருக்கமுடியாது” என்றார்.

பெர்நதெத் பயந்து, சுண்டெலியைப்போல் தன்னை அடக்கிக்கொண்டாள். சுவாமியாருக்கு முரட்டுச் சத்தம். அங்குமிங்கும் நடந்துகொண்டு “யாராவது இப்பேர்ப்பட்ட கதையைக் கேட்டது உண்டா? ஒரு பெண்ணாம்! அவளுக்குச் சுற்றுப் பிரகாரம் வேண்டுமாம்!” எனக் கத்தினார். பின் அவர் “கெபியில் ஒரு காட்டு ரோஜாச் செடிமேல் அவள் காட்சியளிப்பதாகச் சொல்கிறாய். அந்தச் செடி பூக்கும்படி அவள் செய்யட்டும். அப்படியானால் நீ சொல்வதை நான் நம்புகிறேன். உன்னுடன் நானும் மஸபியேல் கெபிக்கு வருவதாக வாக்களிக்கிறேன்” என்றார்.

நடந்ததைக் கேள்விப்பட்டு இருபதாயிரம் ஜனங்கள் கெபியருகே கூடிவிட்டார்கள். இராணுவ வீரர்களை அங்கு கொண்டுவர வேண்டியிருந்தது. உருவிய வாளை ஏந்திய ஒருவன் துணையாக நின்று பெர்நதெத்தைப் பத்திரமாய் அழைத்துச் சென்றான்.

அந்தப் பெண் தோன்றியதும் பங்கு சுவாமியாருடைய விருப்பத்தை பெர்நதெத் தெரிவித்தாள். பெண் சிரித்தாளேயொழிய தான் இன்னார் என்று சொல்லவில்லை.

மார்ச் 24-ம் நாளன்று பெர்நதெத் கெபிக்குச் சென்றாள். ஏற்கனவே அந்தப் பெண் அங்கு நின்றாள். அவளைக் காத்திருக்கப் பண்ணியதற்காக பெர்நதெத் மன்னிப்புக் கேட்டாள். மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை என அந்தப் பெண் கூறியதும் பெர்நதெத் தன் உள்ளத்தில் இருந்ததையெல்லாம் எடுத்துக்கூறி, ஜெபமாலையை எடுத்தாள். ஜெபிக்கையில் ஒரு யோசனை வந்தது. அவள் யார் எனக் கேட்க ஆசை உண்டாயிற்று. “தான் யாரெனச் சொல்லும்படி அவளைக் கெஞ்சிக் கேட்டேன். அந்தப் பெண்ணோ இதற்குமுன் செய்தது போலவே செய்தாள்; தலை குனிந்து புன்சிரிப்புப் பூத்தாள்; பதில் அளிக்கவில்லை. எனக்கு இன்னும் சற்று துணிவு வந்தது. தயவுசெய்து உங்கள் பெயரைத் தெரிவியுங்கள் என்றேன். முன்போலவே அவள் தலைகுனிந்து புன்னகை பூத்தாளேயொழிய பதிலொன்றும் சொல்லவில்லை. மௌனமாயிருந்தாள். நான் அவளுடைய பெயரை அறியப் பாத்திரவதியல்ல என அங்கீகரித்து மூன்றாம் முறையாகக் கேட்டேன்.


“அந்தப் பெண் ரோஜாச் செடிமேல் நின்றுகொண்டிருந்தாள். புதுமைச் சுரூபத்தின் மாதா நிற்கிறாப்போல் நின்றாள். நான் மூன்றாம் முறையாக என் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததும், அவளுடைய முகம் மாறியது. தாழ்ச்சியுடன் தலை குனிந்தாள். கரங்களைக் குவித்து அவற்றை மார்புவரை உயர்த்தினாள். பரலோகத்தை அண்ணார்ந்து பார்த்து, மெதுவாகக் கரங்களை விரித்து, என் பக்கமாய்ச் சிறிது சாய்த்து “அமல உற்பவம் நானே” என்று சொல்லி உடனே மறைந்தாள்.

அந்த வார்த்தைகளை மறந்து விடாதபடி பெர்நதெத் வீட்டுக்கு வரும் வழியில் அவற்றைச் சொல்லிக்கொண்டே வந்தாள். நேரே பங்கு சுவாமியாரிடம் போய்த் தெரிவித்தாள். கோவில் கட்ட பணம் இருக்கிறதா என அவர் கேட்க, பெர்நதெத் இல்லை என்றாள். “என்னிடமும் கிடையாது. அந்தப் பெண்ணைத் தரச் சொல்” என அவர் கூறினார்.

அந்தப் பெண் கேட்ட கோவில் அவளுக்குக் கிடைத்தது. பெரமால் சுவாமியே அதைக் கட்டினார். இன்று அது தற்கால உலகிலேயே மிக்க அழகுவாய்ந்த ஆலயங்களில் ஒன்றாய்த் திகழ்கிறது.

அந்த அழகிய பெண்ணை பெர்நதெத் கடைசி முறையாகப் பார்த்தது 1858-ம் ஆண்டு ஜூலை 16-ம் நாள் கார்மேல் மாதா திருநாளன்று. அன்றைய காட்சி பதினைந்து நிமிடம் நீடித்தது.

# பாலர் பக்கம்





## அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள்



"தற்காலத்தில் தலைசிறந்த புனிதை" என்று அர்ச். பத்தாம் பத்திநாதரால் அழைக்கப்பட்டவள் நமது அர்ச்.குழந்தை சேசுவின் தெரேசம்மாள். தான் வாழ்ந்த 24 ஆண்டுக்குள் அர்ச்சியசிஷ்டதனத்தின் சிகரத்தை அடைந்த இவள் குழந்தைகளுக்கு நல்லதோர் முன்மாதிரிகை. இவளுடைய வாழ்க்கையை அறிந்து, இவளைப் போல் வாழ்ந்து, நாமும் மகிமை அடைவோமாக !!



**(1)** தெரேசம்மாள் பிரான்ஸிலுள்ள அலென்ஸோனில், 1873, ஜனவரி 2 அன்று பிறந்தாள். அவளுடைய தந்தை லூயிஸ் மார்ட்டின், கைக்கடிகாரம் செய்பவர், தாய் மேரி க்வெரின், நூல் வேலைப்பாடுகள் செய்பவள். பக்தியுள்ள கிறீஸ்தவர்களாகிய அவர்கள் கடின உழைப்பாளிகள், ஓரளவு வசதியுள்ளவர்கள். தெரேசம்மாள், மார்ட்டின் குடும்பத்தில் ஒன்பதாவது குழந்தை யாகப் பிறந்தாள்.



**(2)** பிறந்து முப்பத்து மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, சின்ன தெரேசம்மாள் அலென்ஸோன் மாதா தேவாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டாள். அங்கே அவளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.







**(3)** அவள் ஞானஸ்நானம் பெற்ற சில நாட்களுக்குப் பிறகு, தெரேசம்மாளின் தாய் நோய்வாய்ப்பட்டாள். சின்னக் குழந்தை தெரேசம்மாளும் நோய்வாய்ப்பட்டாள். அருகாமையிலுள்ள ஒரு பண்ணையில் வேலை செய்த ரோஸினா என்ற பெண் தெரேசம்மாளைக் கவனித்துக் கொள்ள நியமிக்கப்பட்டாள். ரோஸினா தெரேசம்மாளைத் தன் கரங்களில் எடுத்தபோது, குழந்தை இறந்து விட்டதாகத் தோன்றியது. குழந்தையின் தாய் திருமதி மார்ட்டின் பக்திப் பற்றுதலோடு ''ஆண்டவரே, உம்முடைய சித்தம் நிறைவேறக் கடவது!'' என்று ஜெபித்தவுடன், தெரேசம்மாள் மீண்டும் கண்விழித்ததோடு, பூரண உடல்நலமும் பெற்றுக் கொண்டாள்.

**(4)** ரோஸினா என்ற பணிப்பெண் தெரேசம்மாளை ஸெமால் நாட்டுப்புறத்தில் வளர்ப்பதற்கு எடுத்துச் சென்றாள். அங்கு தெரேசம்மாளையும், மற்ற குழந்தைகளையும் பார்க்க வந்த ஸெமால்லின் முதிய பங்குக் குருவானவர், தெரேசம்மாளை ஆசீர்வதித்ததோடு, அவள் அர்ச். அவிலா தெரேசம்மாளைப் போல் ஓர் அர்ச்சியசிஷ்டவள் ஆக வேண்டும் என்றும் கடவுளிடம் ஜெபித்தார். ''இவள் ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதால், தெரேசம்மாள் மிக நல்லவளாக இருப்பாள்'' என்று அவர் குழந்தைகளிடம் கூறினார்.







**(5)** தெரேசம்மாள் குணம்பெற்று வீடு திரும்பினாள். அவளது வியாதியின் காரணமாக அவளுடைய பெற்றோரால் அவள் சற்று கெட்டுப்போக நேர்ந்தது. ஒரு நாள் தெரேசம்மாளின் தாய் தன் படுக்கையில் இருந்த அவளை முத்தமிட விரும்பினாள். ஆனால் அவள் அதை மறுத்து, ''யாரும் என்னைப் பார்ப்பதை நான் விரும்பவில்லை!'' என்றாள். திருமதி மார்ட்டின் அதற்காக அவளைக் கடிந்து கொண்டாள். தெரேசம்மாள் தன் தாயின் முன் முழந்தாளிட்டு, ''அம்மா, நான் கெட்டவளாக இருந்தேன். என்னை மன்னியுங்கள். நான் மறுபடியும் இப்படிச் செய்ய மாட்டேன்'' என்றாள்.

**(6)** தெரேசம்மாளுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் தன் தாய் தந்தையருடன் கோவிலுக்குப் போவதென்றால் மிகவும் பிரியம். ஒரு ஞாயிற்றுக்கிழமை மழை பெய்துக்கொண்டிருந்தபோது, மூன்றே வயதாகியிருந்த தெரேசம்மாள் யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு நழுவி, தனியாக கோவிலுக்குச் செல்லத் தொடங்கினாள். ஏனெனில் அவளது பெற்றோர் அவளைக் கோவிலுக்கு அழைத்துச் செல்லவில்லை. தெரேசம்மாள் கோவிலுக்குப் போய்ச் சேர்வதற்கு முன்பே பணிப்பெண் ஓடிச்சென்று, அவளைத் தடுத்து நிறுத்திவிட்டாள். அதனால் தெரேசம்மாள் நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தாள்.



**(7)** தெரேசம்மாளுக்குத் தன்னுடைய சிறு பொருட்களை ஏழைகளுக்குக் கொடுத்து விடுவதென்றால் மிகவும் பிடிக்கும். அவளும் அவளுடைய சகோதரி செலீனும் தாங்கள் செய்த சிறு பரித்தியாகங்களை பயிற்சிகள் என்று அழைத்தார்கள். அவளுடைய மூத்த சகோதரியான மேரி தெரேசம்மாளுக்கு விசேஷமான ஜெபமாலையைக் கொடுத்தாள். அது அவர்களுடைய நல்ல செயல்களை எண்ணுவதற்காக பதினைந்து ஜெபமாலை மணிகளைக் கொண்டிருந்தது. வெகு சீக்கிரத்தில் தெரேசம்மாள் தன்னுடைய அநேக நல்ல செயல்களை எண்ணுவதற்கு அந்தப் பதினைந்து மணிகள் போதவில்லை என்பதைக் கண்டுகொண்டாள்.



**(8)** தெரேசம்மாளின் தாய் நீண்ட காலமாகவே படுத்த படுக்கையாக இருந்தாள். அவளுடைய வாழ்நாள் முடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் மரிப்பதற்குச் சற்று நேரத்திற்குமுன், தன் மகள் பவுலினின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, ''நீ உன் சகோதரிகளுக்குத் தாயாக இருந்து அவர்களை நன்றாகக் கவனித்துக் கொள்'' என்றாள். பின்பு திருமதி மார்ட்டின் கடைசி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொண்டபின், 1877-ம் வருடம், ஆகஸ்ட் மாதம் 28-ம் நாள் மரித்தாள்.



**(9)** திரு.மார்ட்டின் தம் வேலையை விட்டுவிட்டு, குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது என்று முடிவு செய்தார். அவர் தம் மனைவியின் சகோதரர் வசித்து வந்த லிஸியே என்னும் ஊருக்குக் குடிபெயர்ந்தார். அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்த போது, அவர்களுடைய மாமா அவர்களை அன்போடு வரவேற்றார். சிறிது காலத்திற்குப் பிறகு, அவர்கள் தங்கள் மாமாவின் வீட்டுக்கு அருகிலேயே இருந்த மற்றொரு வீட்டில் குடியேறினார்கள்.



**(10)** ஐந்து வயது முதல் எட்டரை வயதாகும் வரை, தெரேசம்மாள் வீட்டிலேயே தங்கிப் படித்துவந்தாள். ஒவ்வொரு நாளும் பிற்பகல் அவளுடைய தந்தை ஏதாவது ஒரு கோவிலைச் சந்திக்கும்படி அவளை அழைத்துச் செல்வார். ஒருநாள் அவர் கார்மேல் சகோதரிகளின் கோவிலுக்கு அருகிலிருந்த ஒரு கதவை அவளுக்குச் சுட்டிக்காட்டி, ''பார், தெரேஸா. அந்தக் கதவுக்குப் பின்னால், கடவுளிடம் எப்போதும் ஜெபித்துக்கொண்டிருக்கிற பரிசுத்த கன்னியர்கள் இருக்கிறார்கள்'' என்று சொன்னார்.

**(தொடரும்)**

# பொறுமை

**அர்ச். பிரான்சிஸ் சலேசியார்**

“பக்திநெறி வழிகாட்டி” யிலிருந்து எடுக்கப்பட்டது

“கடவுள் திருவுளத்தை நிறைவேற்றி அவர் வாக்களித்திருக்கும் கைம்மாறு பெறுவதற்குப் பொறுமை தேவை” என்கிறார் அர்ச். சின்னப்பர். “உங்கள் பொறுமையால் உங்கள் ஆன்மாக்களைக் காப்பாற்றிக்கொள்வீர்கள்” என்கிறார் நம் ஆண்டவர். நமதான்மாவைக் காப்பாற்றிக்கொள்வதை விடச் சிறந்த பேறு இவ்வுலகில் நமக்கு வேறில்லை. நம் பொறுமை எத்துணைச் சிறந்ததோ அத்துணைச் சிறந்த முறையில் நமதான்மாவைக் காப்பாற்றிக்கொள்வோம். துயரங்களைப் பொறுத்து, இன்னல் இடையூறுகள் நடுவில் அமைதியைக் காப்பாற்றி, துன்பத்தின் பாதையில் அன்புடன் நடந்து, நமதான்மாவை நாம் ஈடேற்றவேண்டும்.

குறிப்பிட்ட ஒரு சில துன்ப துயரங்களில் மட்டும் பொறுமை காட்டுவது போதாது. கடவுள் நமக்கு அனுப்பும் எல்லா துன்பங்களிலும், நம் வாழ்க்கையில் குறுக்கிட அவர் அனுமதித்த எல்லா இன்னல்களிலும் நம் பொறுமை சிறந்து விளங்கவேண்டும். சிலர் தங்களுக்குப் புகழையும் மதிப்பையும் தேடித்தரும் துன்பங்களை மட்டும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வார்கள். போர்முனையில் காயம்படுவது, போரில் கைதியாகப் பிடிபடுவது, சத்திய வேதத்திற்காக வாதனைப்படுவது, ஒரு வழக்கில் வெற்றி காணும்பொருட்டு செல்வத்தை இழப்பது, இவைபோன்ற இன்னல்களை ஒரு சிலர் மனமுவந்து ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இத்தகையோர், அந்தத் துன்பங்களை அன்புடன் வரவேற்கிறார்களென்று சொல்ல முடியாது. இந்தத் துன்பங்களால் வரும் புகழைத்தான் தேடுகிறார்கள். உண்மையான பொறுமையுள்ள பக்தர்கள், துன்பத்தின் விளைவாக இகழ்ச்சி வருகிறதா, புகழ்ச்சி வருகிறதா என்பதைக் கவனியாமல் எல்லா இன்னல் இடையூறுகளையும் ஒரே மனதாய் வரவேற்று மகிழ்வார்கள். தீயோர்களால் குற்றம் சாட்டப்பட்டு அவமானத்திற்கு உள்ளாவது, அஞ்சா நெஞ்சம் படைத்த ஒருவனுக்கு இன்பமாகத் தோன்றலாம். ஆனால் நல்லவர்களாலும், உற்றார் உறவினர்களாலும் அவமதிக்கப்பட்டு இழிவாக நடத்தப்படும்பொழுது, பொறுமை காட்டுவதுதான் உண்மையான பக்தியின் சிறந்த அறிகுறி. பெயர் பெற்ற ஒரு துறவற சபையின் உறுப்பினர்



**அர்ச். சார்லெஸ் பொரோமியோ**

ஒருவர் அர்ச். சார்லெஸ் பொரோமியோவை வன்மையாகத் தாக்கி ஒரு நாள் உரையாற்றினார். அந்தப் பகிரங்கக் குற்றச்சாட்டுகளால் ஏற்பட்ட அவமானத்தை அர்ச்சிஷ்டவர் நீண்டகாலம் மிகுந்த பொறுமையோடு தாங்கி நடந்துகொண்ட முறை மிகவும் வியப்பிற்குரியது. தம் வாழ்நாளெல்லாம் பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு மனிதர்களிடம் அவர் காட்டிய பொறுமை சிறந்ததென்று நினைக்கிறேன். கொசு கடிப்பதைவிட தேனீ கொட்டுவதுதான் மிகுந்த வலிதரும். அவ்வாறே, தீயோர்களின் தாக்குதல்களைவிட, நல்லவர்களால் ஏற்படும் இன்னல்கள்தாம் மிகுந்த துயரம் தரும். மிகவும் நல்லவர்களான நண்பர்கள் இருவரிடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டால், ஒருவர் ஒருவரைத் தாக்கித் துன்புறுத்துவதை அன்றாடம் காண்கிறோம். நமக்கு நேரிடும் துன்ப துயரங்களை மட்டும் பொறுமையோடு ஏற்றுக்கொள்வது போதாது.

அந்தத் துன்பங்களின் விளைவாக ஏற்படும் தொந்தரவுகளையும் சங்கடங்களையும் மன அமைதியோடு ஏற்றுக்கொள்ளும் பொழுதுதான் பொறுமை நிறைவாகும். தங்களுக்குத் தொந்தரவோ பொருட் சேதமோ வருவியாத எந்தத் துன்பம் வந்தாலும் வரட்டும் என்று சிலர் சொல்லுவார்கள். என் நண்பர்களுக்கு உதவி செய்யவும், என் பிள்ளைகளைப் படிக்க வைக்கவும் இடையூறு இல்லாமல் நான் ஏழையாகிவிட்டால் அதைப்பற்றி வருந்தமாட்டேன் என்று எத்தனையோபேர் சொல்லுவார்கள். என் குற்றத்தால் இந்தத் துயரம் எனக்கு ஏற்பட்டது என்று பிறர் நினைக்காமலிருந்தால் துயரத்தைப் பொருட்படுத்த மாட்டேன் என்று வேறு சிலர் கூறுவார்கள். இன்னும் சிலர், எங்கள்மேல் பிறர் கூறும் அவதூற்றை உலகம் நம்பாவிடில் நாங்கள் அந்த அவதூற்றைப் பொறுமையோடு தாங்குவோம் என்பார்கள். எத்தனையோ பேர் தங்களுக்கு ஒரு துன்பம் ஏற்படும்பொழுது, அந்தத் துன்பத்தை முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்கள். எடுத்துக்காட்டாக, ஒருவன் நோயுற்றிருந்தால் அந்த நோயைப் பொறுமையாக ஏற்றுக்கொண்டாலும், அதனால் தன் உற்றார் உறவினருக்குத் தொந்தரவு ஏற்படுமென்றும், மருந்திற்காகப் பணம் செலவாகு மென்றும் முறையிடுவார்கள். பக்த ஆன்மாவே, தெளிவாகச் சொல்லுகிறேன். நமக்கு ஒரு நோய் வரும்பொழுது, அந்த நோயைமட்டும் கடவுள் திருவுளமென்று பொறுமையோடு ஏற்றுக்கொண்டால் போதாது. அந்த நோயின் சூழ்நிலைகள், விளைவுகள், தொந்தரவுகள் ஆகிய அனைத்தையும் பொறுமை யோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். இத்தகைய முழுப் பொறுமைதான் உண்மையான பொறுமை.

உனக்கு ஏதேனும் ஒரு நோய் வந்தால் அதற்குரிய மருந்துகளைக் கடவுள் நம்பிக்கையோடு பயன்படுத்து. மருந்து எதுவும் அருந்தாமல் கவலையற்றதனமாக இருப்பது கடவுளைச் சோதிப்பதாகும். மருந்து பயன்படுத்திய பிறகு கடவுள் திருவுளத்திற்கு முற்றும் அமைந்திரு. உன் நோய் குணமாயிற்றெனில் கடவுளுக்கு நன்றி செலுத்து. மருந்துகள் எவ்வகையிலும் பயன் தருவதில்லையெனில், கடவுள் திருவுளம் நிறைவேறுவதாக என்று மனமாரச் சொல்.

அர்ச். கிரகோரியார் கூறும் அறிவுரையைத்தான் நானும் உனக்குக் கூறுவேன். நீ ஏதேனும் குற்றம் செய்தபிறகு, பிறர் அதைப்பற்றி உன்னைக் கண்டித்தால், தாழ்ச்சியோடு உன் குற்றத்தை ஒப்புக்கொள். ஆனால், அநியாயமாக உன்பேரில் குற்றம் சாட்டினால் தாழ்ச்சியுடன் அந்தக் குற்றச்சாட்டை மறுத்துவிடு. ஏனெனில் உண்மை வெளிப்பட வேண்டும், பிறருக்கு ஏற்பட்ட துர்மாதிரிகை நீக்கப்பட வேண்டும். நீ உண்மையைத் தெளிவாகவும், நியாயமாகவும் சொன்ன பிறகும் பிறர் உன்பேரில் மீண்டும் குற்றம் சாட்டிக் கொண்டே இருந்தால், வீணாகக் கலங்கவோ உன் மறுப்பை அழுத்தந் திருத்தமாக வெளியிடவோ வேண்டாம். உண்மை வெளிப்படவேண்டும் என்பதற்குரிய கடமையை நீ நிறைவேற்றிவிட்டாய். இப்பொழுது உன் தாழ்ச்சி விளங்குவதற்குரிய கடமையை உன் பொறுமையால் நிறைவேற்று. இவ்வாறு, உன் பெயரைக் காப்பாற்றுவதில் உனக்குள்ள கடமையை நிறைவேற்றுகையில், தாழ்ச்சி, அமைதி, சாந்தம் முதலிய புண்ணியங்களை நீ அசட்டை செய்யவில்லை என்ற மனநிறைவு உனக்கு உண்டாகும்.

பிறர் உனக்குத் தீங்கு செய்யும்பொழுது உன்னால் இயன்ற அளவு முறையிடாமல் அமைதியாயிரு. பிறர் நமக்குச் செய்த தீங்கு சிறிதெனினும் அதைப் பெரிதாக்கிப் பேசத் தன்னலம் நம்மைத் தூண்டுவது இயல்பு. ஆகவே, முறையிடுபவன் எப்படியேனும் ஒரு வகையில் குற்றத்திற்கு உள்ளாகிறான். மிகவும் எளிதில் சினங்கொண்டு தவறாகத் தீர்ப்புக்கூறும் தன்மையுடையவர்களிடம் முறையிடுவதால் சிறிதளவும் பயனில்லை. உனக்கு நேர்ந்த தீமைக்கு ஈடுசெய்யவோ, உனக்கு மன அமைதி ஏற்படவோ முறையிட்டுத்தான் தீர வேண்டுமெனில் பக்தியும் இனிய பண்பும் உடைய ஒருவரிடம்மட்டும் உன் மன நிலையை வெளிப்படுத்து. இல்லையேல், உனக்கு மன அமைதி ஏற்படுவதற்குப் பதிலாய் வீண் கலக்கம்தான் ஏற்படும். உன் காலில் தைத்த முள்ளைப் பிடுங்கியெடுப்பதற்குப் பதிலாய் இன்னும் ஆழமாக உள்ளே புகுத்துவாய்.

சிலர் தங்களுக்கு ஏதேனும் நோய், நிந்தனை, துயரம் ஏற்பட்டால், முறையிடுவது மனத்திட்பமின்மை என்பதை உணர்ந்து அமைதியாக இருப்பார்கள். ஆனால், தங்கள்மேல் பிறர் அனுதாபப்படுவதற்கும், தாங்கள் பொறுமையும் அஞ்சாமையும் உடையவர்களென்று பிறர் பாராட்டுவதற்கும் பற்பல நுட்பமான சூழ்ச்சிகளைக் கையாள்வார்கள். இத்தகைய பொறுமை, போலிப் பொறுமையும், வீண் பெருமையையும் புகழ்ச்சியையும் தேடும் பேராவலும் ஆகும். இவர்கள் மனிதர் முன்னால் மேன்மை பெற்றாலும் கடவுள் முன்னிலையில் புகழ்ச்சிக்குரியவர்கள் அல்லர் என்கிறார் அர்ச். சின்னப்பர். உண்மையான பொறுமையுடைய மனிதன் தன் நோயைப்பற்றிப் பேசுவான். பிறர் அனுதாபம் தெரிவித்தால் அதை ஏற்றுக்கொள்வான். மிகைப்படுத்தி பிறர் அனுதாபப் பட்டால் தன்னிடம் அவ்வளவு நோய் இல்லை என்பதை ஒப்புக்கொள்வான். இவ்வாறு உண்மையையும் பொறுமை யையும் சமன் செய்து சீர்தூக்கிப் பாதுகாப்பான்; முறைப்பா டின்றி உண்மையை மட்டும் வெளிப்படுத்துவான்.

புண்ணியப் பயிற்சியில் உனக்கு இடையூறுகள் ஏற்படும்பொழுது ஆண்டவர் அருளிச் செய்த வாக்கியத்தை நினைவுகூர்ந்துகொள். "ஒரு தாய் பிள்ளையைப் பெறும் பொழுது வருந்தித் தவிக்கிறாள். ஆனால் குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு தன் துன்பத்தை மறந்து, உலகில் ஒரு மனிதன் புதிதாய்த் தோன்றியிருக்கிறானென்று மகிழ்வாள்" என்கிறார் ஆண்டவர். நீ உன் ஆன்மாவில் மிகவும் சிறந்த ஒரு குழந்தையைக் கருத்தரித்திருக்கிறாய். ஆண்டவராகிய சேசு என்னும் அந்தக் குழந்தை உன் ஆன்மாவில் உருவாகி வளர்ச்சி யடையும் காலமனைத்தும் நீ பற்பல வகைகளில் வருந்தித் தவிப்பாய் என்பது உண்மையே. ஆனால், இந்தக் குழந்தையை நீ ஈன்றெடுக்க நேர்ந்தால் உன் துன்பமனைத்தும் மறைந்து ஒழிந்து நித்திய பேரின்பம் உனக்கு உரிமையாகும் என்பதை உணர்ந்து பேருவகை கொள். ஆண்டவரின் வாழ்க்கையை உன் அன்றாட அலுவல்களிலும் உள்ளத்து உணர்ச்சிகளிலும் உனக்கு எடுத்துக்காட்டாகக் கொள்வதுதான் அவரை ஈன்றெடுப்பது.

தொடர்ச்சி 24-ம் பக்கம் காண்க . . . . .

# அர்ச். சின்னப்பரும் விசுவாசமும்

சங். K. அந்தோணி சுவாமி,
தூத்துக்குடி மேற்றிராசனம்

என்ன நேரிட்டாலும் எபிரேயர் விசுவாசத்தில் தளரா திருக்க வேண்டுமென்று சின்னப்பர் வற்புறுத்துகிறார்.

***"துர் மனசாட்சி நீங்க, தெளிக்கப்பட்ட இருதயங்களும், பரிசுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமும் உள்ளவர்களாய், பூரண விசுவாசத்தோடும் உண்மையான இருதயத்தோடும் அவரிடம் அண்டிப்போவோமாக" (10:22).***



அர்ச். சின்னப்பர்

விசுவாசம் என்றால் என்ன என்பதுபற்றி பின்வருமாறு விளக்குகிறார்:

***"விசுவாசமானது நாம் நம்பிக் காத்திருக்க வேண்டிய வைகளின் அடிநிலையும், காணப்படாதவைகளின் நிச்சயிப்பு மாயிருக்கின்றது" (11:1).***

மோட்சப் பாக்கியம், சர்வேசுரனோடுள்ள ஐக்கியம்; இந்த ஐக்கியத்திற்குக் காரணமாயிருந்தவர் கிறீஸ்துநாதர்; அவருடைய பிறப்பு, பாடுகள், உத்தானம் இவை யாவற்றையும் நேராக அறியவும், கண்டு அனுபவிக்கவும் கிறீஸ்தவ உள்ளம் ஏக்கம் கொண்டிருக்கிறது. இவைகளை அனுபவிப்போம் என்னும் நம்பிக்கையில் கிறீஸ்தவன் ஜீவிக்கிறான். இந்த நம்பிக்கைக்கு அஸ்திவாரம் விசுவாசம்.

பதினோராம் அதிகாரம் விசுவாசத்தைப்பற்றியே எழுதப்பட்டிருக்கிறது. பிதாப் பிதாக்களின் விசுவாசம் சர்வேசுரனுக்குப் பிரியமாயிருந்தது. நீதியின் அளவுகோல் விசுவாசம் என்கிறார் அர்ச். சின்னப்பர்.

விசுவாச ஒளியால் சத்தியத்தை அறிந்தபின், மனப்பூர்வமாய் விசுவாசத்தைப் புறக்கணிக்கிறவர்களை கண்டிப்பாய் அவர் எச்சரிக்கிறார்.

***"சத்தியத்தை அறியும் அறிவை நாம் கைக்கொண்ட பின்பு, மனதாரப் பாவஞ் செய்வோமாகில், பாவப் பரிகாரமான வேறொரு பலி நமக்குக் கிடையாதே" (10:26).***

***"மோயீசனுடைய பிரமாணத்தை மீறுகிறவன் சற்றும் இரக்கம் அடையாமல், இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தால் சாகிறான். அப்படியானால், தேவசுதனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தப்படுத்தின உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்றெண்ணி, வரப்பிரசாத இஸ்பிரீத்துவுக்கு அவமானஞ் செய்கிறவன் எத்தனையோ அதிக அகோரமான ஆக்கினைகளுக்குப் பாத்திரவானாக இருப்பானென்று நினைக்கிறீர்கள்?" (10:28-29).***

விசுவாசத்தை நிசாரமாய்ப் புறக்கணிப்பது வேதத்தைப் புறக்கணிப்பதாகும்: அது இஸ்பிரீத்துசாந்துவை விரோதிப்ப தாகும்.

**விசுவாசத்தின் கதி – கர்த்தரில் இளைப்பாற்றி**

விசுவாசத்தினால் நம்பிக்கை உண்டாகிறது. நம்பிக்கை

கர்த்தரைக் காண்பதில் முடிவடைகிறது.

***"தேவ பிரஜைகளுக்கு இளைப்பாற்றியின் காலம் இனி வருகிறதாயிருக்கிறது.***

***ஏனெனில் அவருடைய இளைப்பாற்றிக்குள் பிரவேசித்தவன், சர்வேசுரன் தம்முடைய கிரியைகளை முடித்து இளைப்பாறினது போல, தானும் தன் கிரியைகளை முடித்து இளைப்பாறுவான்" (4:9-10).***

பாவச் சுழலில் அகப்பட்டுத் திண்டாடும் கிறீஸ்தவன் சர்வேசுரனுடைய இளைப்பாற்றியினுள் நுழைவதற்குமுன், அதாவது, சர்வேசுரனை அடைவதற்குமுன் கடக்க வேண்டிய படிகள் நான்கு: பாவப்பரிகாரம், ஆத்தும சுத்திகரம், ஆத்தும பரிசுத்தம், ஆத்தும ஜீவிய பூரணம்.

பாவப்பரிகாரம் பிரதான குருவாகிய சேசு கிறீஸ்துவால் நிறைவேறினது:

***"அவர் இரக்கமுள்ளவரும் சர்வேசுரன் மட்டில் பிரமாணிக்கமுள்ள குருப்பிரசாதியுமாயிருந்து ஜனங்களுடைய பாவங்களைப் பரிகரிக்கும்படிக்கு" (2:17) "தம்மைத் தமது சகோதரர்களுக்குச் சமமாக்கினார். அதே சுதனானவர் நம்மை பாவங்களிலிருந்து சுத்திகரித்தார்" (1:3)***

***"அந்த ஏகபலி ஒன்றினால் அர்ச்சிக்கப்பட்டவர்களை என்றென்றைக்கும் உத்தமராக்கினார்" (10:14).***

பழைய ஏற்பாடு எவரையும் உத்தமமாக்குவதற்கு சக்தியற்றதாயிருந்தது. பிதாப் பிதாக்கள் இந்த மேலான கதியை அடைய ஆசைப்பட்டார்கள் அதை அவர்கள் கண்டடையவில்லை.

***"அந்தப் பிரமாணமானது யாதொன்றையும் உத்தம மாக்கவில்லை. ஆனால் நம்மைச் சர்வேசுரனிடத்தில் நெருங்கிப் போகச்செய்கிற மேலான நம்பிக்கைக்கு அது ஒரு வழியா யிருந்தது" (7:19).***

***"நாமில்லாமல் இவர்கள் சம்பூரணம் அடையாதபடிக்கு சர்வேசுரன் நமக்கு அதிக மேன்மையான ஒரு தயவைச் செய்ய சித்தமானார்" (11:40).***

கிறீஸ்துவில் நாம் உத்தமரானோம்; பூரண ஜீவியத்தைக் கண்டோம்.

***"அவர் தேவ சுதனாயிருந்தும், தம்முடைய பாடுகளி னாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, சம்பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்பட்டிருக்கிற யாவருக்கும் நித்திய ஈடேற்றத்தின் காரணமானார்" (5:8-9).***

கிறீஸ்துவில் நித்திய ஜீவியத்தின் சம்பூரணத்தைப் பெற்றபின், பிதாவின் இளைப்பாற்றியில் நுழைவது நிச்சயம்.

. . . . . 22-ம் பக்கம் தொடர்ச்சி

நீ நோயினால் வருந்தும்பொழுது உன் வலுவின்மை யையும் வேதனைகளையும் துயரங்களையும் நம் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய பாடுகளோடு அவற்றையும் ஒன்றித்திருக்குமாறு மன்றாடு. உன் மருத்துவருக்குக் கீழ்ப்படியும்பொழுதும், மருந்து, உணவு முதலியவற்றை அருந்தும்பொழுதும் ஆண்டவர் குடித்த கசப்பான காடியை நினைவுகூர்ந்து அவர்மீது நீ கொண்ட அன்பை முன்னிட்டு எல்லாவற்றையும் அவருக்கே ஒப்புக்கொடு. அவருக்கு ஊழியம் புரிவதற்காக மட்டும் குணமடைய ஆவல்கொள். அவருடைய திருவுளத்தை நிறைவேற்றும்பொருட்டு வியாதியா யிருக்கவோ, அவரை அடைந்து நித்திய பேரின்பம் துய்க்கும் பொருட்டு சாகவோ தயங்கக்கூடாது. தேன் உருவாகும் காலத்தில் தேனீக்கள் மிகவும் கசப்பான உணவைத்தான் உண்கின்றனவாம். இன்னல் இடையூறுகள் நடுவில் துன்ப மென்னும் கசப்பான காடியை அருந்தித்தான் புண்ணிய மென்னும் தேனை உருவாக்கலாம். மிகவும் கசப்பான சில பூண்டுகளினின்று எடுக்கப்படும் தேன் மிகவும் இனிப்பா யிருக்கும் என்கிறார்கள். அவ்வாறே மிகவும் இகழ்வான துன்ப துயரங்களினின்று உருவாகும் புண்ணியங்கள்தாம் மிகவும் சிறந்தவை.

உன் துயர வேளைகளில் உன் ஆண்டவராகிய சேசுவை உற்றுப்பார். அவர் உன்பொருட்டு இகழப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, சொல்லரிய துன்பங்களின் நடுவில் நிர்வாணமாய்ச் சிலுவையில் அறையப்பட்டார். அவர் பட்ட அளவு கொடிய துன்பங்களை நீ எந்நாளும் படப்போவது இல்லை. நீ அவருக்காகப்பட்ட துன்பங்கள், அவர் உனக்காகப் பட்ட பாடுகளுக்கு நிகராகப்போவதுமில்லை. முற்கால வேதசாட்சிகள் பட்ட வாதனைகளை நினைவுகூர்ந்துகொள். இக்காலத்திலும் எத்தனையோபேர் பல்வேறு வகைகளில் உன்னைவிட மிகுதியாய்த் துன்பப்படுகிறார்கள். ஆகவே, மன அமைதியுடன் கீழ்க்கண்டவாறு சொல்: "எவ்வகை ஆறுதலோ தணிவோ இன்றி எத்தனையோபேர் என்னைவிட மிகுதியாகத் துன்பப்பட்டிருக்க, என் துன்பங்களை இன்பங்க ளாகவும் என் முட்களை ரோஜா மலரிதழ்களாகவும் கருதுகிறேன்."

**விசுவசித்து, ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சண்யமடைவான், விசுவசியாதவனோ ஆக்கினைத் தீர்வையிடப்படுவான்.** (மாற்கு. 16:16)



# நற்கருணையின் பாப்பரசர்

**- அர்ச் பத்தாம் பத்திநாதரின் ஜீவிய சரிதை**

திரு. ஆர்.பி. குழந்தைசாமி, தூத்துக்குடி, 1956

## IV - சால்சானோ பங்கு சுவாமியார்

***"ஆயனைப்போல் அவர் தம் மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைப் புயபலத்தால் வளைத்து, அவைகளைப் பட்சமாய் அரவணைப்பார்; சினை ஆடுகளைத் தாமே தூக்குவார்"*** *(இசை. XL.11).*

**1867**-ம் வருடம் மே மாதம் சால்சானோ பட்டணத்தின் பங்கு சுவாமியாராக சார்த்தோ சுவாமியார் அனுப்பப்பட்டார். அவருக்கு இப்போது வயது 32. ஏறக்குறைய ஒன்பது வருடமாக துணைக் குருவாய் உழைத்து வந்த தொம்போலோ கிராமத்தைவிட்டுப் போக வேண்டிய நாள் வந்தது.

"எங்களுக்குத் தகப்பனும், தமையனும் போலிருந்த தங்கமான குரு எங்களைவிட்டுப் போகிறாரே" என்று ஏங்கினர் அக்கிராமத்தார்.

"ஏழைகளின் இரக்கமுள்ள தந்தை இவ்விடம் விட்டுப் போய்விட்டால் இனி எங்கள் கதி என்னவாகுமோ" என்று கலங்கினர் அனாதைகள்.

"எங்களப்பன் சார்த்தோ போய் விட்டால் எங்களுக்கு சாயங்காலத்தில் ஞானோபதேசம் செய்பவர் யார்?" என்று கூவினர் சிறுவர், சிறுமியர்.

"திருவிழா நாட்களில் இனி இக்கோவிலில் பாட்டும், பிரசங்கமும் சற்று பூச்சியமாகவே போகும்" என்றனர் எல்லோரும்.

"இராப்பகலென்றிராமல் எந்த நேரம் போனாலும் பாவசங்கீர்த்தனம் கேட்கப் பால்ய குரு தட்டிக்கழிக்க மாட்டாரே! இனி வருபவர் எப்படியோ!" என்று கவலை கொண்டனர் பலர்.

பங்கு குரு அந்தோனி சுவாமியார் சார்த்தோ போய்விட்டால் தமது கை உடைந்தது போலாகி விடுமென்று கவலை கொண்டார். ஆயினும் எல்லோருமாக அவருக்கு மங்கள வாழ்த்துதல் கூறி வழியனுப்பிவைத்தார்கள்.




சால்சானோ மிகச் செழிப்பான ஊர். கோவில் சிறிதானாலும் சிறப்பானது. ஜனங்கள் மிகவும் அமைதியும் சமாதானமும் நிறைந்த கடின உழைப்பாளிகளான குடிமக்கள்.

1867-ம் வருடம் ஜூலை மாதத் துவக்கத்தில் சார்த்தோ தமது புதுப்பங்கின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். முதல் ஞாயிற்றுக்கிழமை தங்கள் புது பங்குசுவாமியாருடைய பிரசங்கம் கேட்கவேண்டுமென்று கிறீஸ்தவர்கள் பெருங்கூட்ட மாய் அவருடைய பூசைக்கு வந்து சேர்ந்தார்கள். சங். சூசை சார்த்தோவின் பிரசங்கமும் முடிந்தது. அவர் பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்திக்காதவர்கள் இல்லை. "இவ்வளவு அருமையான பிரசங்கியை ஏதோ ஓர் குக்கிராமத்தில் ஒன்பது வருஷகாலம் ஒளித்து வைத்தார் களே" என்று யாவரும் ஒருவாய்ப்படக் கூறினர்.

தமது புதிய பங்கிலுள்ள கிறீஸ்தவர் களை வீடு வீடாய்ப் போய் விசாரிக்கத் தொடங்கினார் சார்த்தோ. சிறு பிள்ளை யைப்போல் கபடமின்மையும், அப்போஸ்தலரைப்போல் ஆத்தும இரட்சண்ய ஆவலும், தந்தையைப்போல் தாட்சண்யமும் முதலிய நற்குணங்களும் அவரிடம் விளங்கியதைக் கண்ட இவ்வூர் மக்கள் அவர்மீது கொண்ட அன்புக்கும் நம்பிக்கைக்கும் அளவில்லை. சிறுவருக்கு ஞானோபதேசமும், நல்லொழுக்கமும் கற்பிப்பதில் வெகு கவலை கொண்ட துடன், படிப்பில்லாத வயோதிகருக்கும் வேத காரியங்களை விளக்கித் தெளிவிக்க




வெகு சிரத்தை எடுத்துக்கொண்டார். கடவுள் ஞானமும், அவருடைய வேதத்தின் உண்மையும் சரிவரக் கண்டு உணராததே, இவ்வுலகிலுள்ள சகல அக்கிரமங்களுக்கும் தலையான காரணமென்று சார்த்தோ கூறுவார்.

செழிப்பான ஊரில், செல்வந்தரான குடியானவர் நிறைந்த பெரிய பங்கில் விசாரணைக் குருவாயிருந்தாலும் சார்த்தோ வழக்கம்போல் வெகு சிக்கனமான ஜீவனம் செய்தார். இந்தப் பங்கில் அதிக வரும்படி வந்தது. அநாதைகளுக்கு அதிக தர்மம் செய்வதற்கே உதவிற்றொழிய, அவருடைய சொந்த செலவு முன்னிருந்தது போலவே மிகவும் குறைவாகவே இருந்தது. அவருடைய சகோதரிகள் ரோசாள், அன்னாள் இருவருமே அவருடைய சாப்பாட்டுச் செலவு காரியங்களைக் கவனித்துக்கொண்டு வந்தார்கள். வேறே வேலைக்காரர் யாரும் அவருக்கில்லை. சில சமயங்களில் அவர்களுடைய சாப்பாட்டுக்கு வெறும் ரொட்டி முதலாய் அகப்படுவது கஷ்டமென்று சங். சார்த்தோவின் சகோதரிகள் சொல்லியிருக்கிறார்கள். இப்படியிருந்தாலும் ஏழைகளுக்கு உதவ எப்போதும் அவரிடம் பணமிருப்பதுபோல் காணப்படும். விருந்தினரை உபசரிக்கவும் வேண்டிய பொருள் எங்கிருந்தோ உண்டாகிவிடும். அவருடைய சகோதரிகள் அடிக்கடி அவருடைய கிழிந்த கேவலமான உடுப்புகளைப் பற்றிச் சொல்லிக்காட்டி, புதிய உடுப்புகள் வாங்கிக் கொள்ளும்படி எத்தனை முறை வற்புறுத்தினாலும்,

"இவ்வித உடையுமில்லாத அநேகரை நானறிவேன்" என்று கூறி அவர்கள் வாயை அடைத்துவிடுவார்.

ஒருநாள் சாயங்காலம் சார்த்தோ சுவாமியாரைப் பார்க்க அவருடைய பழைய சிநேகிதரில் ஒருவராகிய சங். கார்லோ சுவாமியார் வந்தார். அப்போது சிறு பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருந்த சார்த்தோ சுவாமியார் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தமது சிநேகிதரை உபசரித்துத் தன்னுடன் இரண்டுநாள் இருக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். அப்படியே அவரும் சம்மதித்து அவ்விடம் தங்கினார்.

மறுநாட் காலை ரோசாள் கார்லோ சுவாமியாரிடம் போய்,

"சுவாமி நீங்கள் சார்த்தோவுக்கு மிகவும் பிரியமுள்ள நண்பர் என்று எனக்குத் தெரியும். நாளைக்குத் துணி வியாபாரி இவ்விடம் வரும்படியாக ஏற்பாடு செய்து இருக்கிறேன்" என்றாள்.

"அப்படியா!" என்று கார்லோ சுவாமியார் சொல்லி துணி வியாபாரி வருவதைப்பற்றி ரோசாள் தன்னிடம் தெரிவித்த விபரம் தெரியாமல் ஆச்சரியப்பட்டார்.

"நேற்று சார்த்தோவுக்குக் கொஞ்சம் பணம் கிடைத்த தென்று எனக்குத் தெரியும். அவருக்கு ஒரு நல்ல உடுப்புகூட கிடையாது. எல்லாம் கிழிந்து கந்தலானவற்றையே திருப்பித் திருப்பி தைத்துப் போட்டுக்கொள்ளுகிறார். நான் என்ன சொன்னாலும் என் பேச்சைத் தட்டிவிடுகிறார். நாளைக்குத் துணி வியாபாரி வரும்போது நீங்கள் தயவுசெய்து சார்த்தோ விடம் பேசி ஒன்றிரண்டு புது அங்கிக்கு வேண்டிய துணி வாங்கும்படியாகக் கூற வேண்டுகிறேன். நீங்கள் சொன்னால் ஒருவேளை அவர் சம்மதிப்பார்" என்றாள் ரோசாள்.

"ஓ! அப்படியா சமாச்சாரம்! நான் கட்டாயம் அவரிடம் இதைப்பற்றிப் பேசுகிறேன்" என்று சொல்லி, சார்த்தோ சுவாமியார் பூசை முடிந்து தமது அறைக்கு வந்த வுடன், துணி வாங்கும் காரியத்தைப்பற்றி அவரிடம் பேசத் தொடங்கினார்.

தமது நண்பர் சொன்னவற்றையெல்லாம் கேட்ட பின்னர்,

"நல்லது, அதற்கு இப்போது என்ன அவசரம்! இது ரோசாள் வேலையாயிருக்கும், பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று சார்த்தோ சொல்லிவிட்டார்.

ரோசாள் செய்திருந்த ஏற்பாட்டின்படி துணி வியாபாரி வந்து சேர்ந்தான். கார்லோ சுவாமியார் அவன் வைத்திருந்த துணிகளைப் பரிசோதித்து சில உட்சட்டைகளுக்கும் ஒரு அங்கிக்கும் வேண்டிய துணிகளைத் தேர்வு செய்து, விலை பேசி, அவைகளைத் துண்டாக வெட்டித் தரும்படி வியாபாரி யிடம் சொன்னார். வியாபாரியும் துணியை வெட்டித் தந்தவுடன்,

"சுவாமி சார்த்தோ, இத்துணிகள் உமக்காக வாங்கினேன், அவற்றின் விலையைக் கொடும்" என்று புன்னகையுடன் கார்லோ சுவாமியார் சொல்லவே, பக்குவமாய்த் தன் சிநேகிதர் தன்னை ஏமாற்றியதைக் கண்டு, சார்த்தோ சுவாமியார் துணியின் கிரயத்தைக் கொடுத்து,

"கார்லோ சுவாமியார் இத்தனை கபடமுள்ளவரென்று எனக்குத் தெரியாதே. ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைச் சற்றுநேரத்தில் விரயமாக்கிவிட்டாரே!" என்று சொன்னார்.

ரோசாள் இதைக் கண்டு களிப்படைந்து, "நல்ல காலம், சுவாமி, நீங்கள் இப்போது வந்தது. நீங்கள் இந்தத் தந்திரம் செய்திராவிட்டால் நாளை இந்நேரம் சார்த்தோ விடத்தில் பணமுமிராது, துணியுமிராது" என்று சொல்லிச் சிரித்தாள்.

சால்சானோ ஒரு பெரிய பங்கானபடியால் பங்கு சுவாமியாருக்கு ஒரு குதிரைவண்டி அவசியமாயிருந்தது. சார்த்தோவிடமிருந்த குதிரைக்குச் சரியான வேலைதான்.

ஏனெனில் பங்குசுவாமியாருக்கு மாத்திரம் அவ்வண்டி உபயோகப்பட்டதல்ல. எவரெவருக்கு வண்டி அவசியமோ அவரவர் பங்குசுவாமியாரிடம் வந்து கேட்கவேண்டியதுதான் பாக்கி; யாதொரு தடையின்றி சுவாமியார் வண்டியைக் கேட்டவர் உபயோகத்திற்கு கொடுப்பார். இவ்வாறு அவரிடம் வண்டி இரவல் கேட்டு வாங்கிப்போன ஒருவன் வண்டியை திருப்பிக் கொண்டுவந்தபோது குதிரையின் இரண்டு முட்டியிலும் பெருங் காயங்களைக் காட்டி,

"சுவாமி, ஒரு ஆபத்து வழியில் நேரிட்டது, குதிரை கால் தவறி....." என்று அவன் சொல்லி முடிக்குமுன் சார்த்தோ சுவாமியார் குதிரையைத் தட்டிக்கொடுத்து,

"சரி, சரி, ஆபத்து யாருக்கும் வரத்தான் செய்யும், நீ அதைப்பற்றி கவலைப்படவேண்டாம்" என்று சொல்லி அவனை சந்தோஷமாய்ப் போகச்செய்தார்.

பரம ஏழைகள் பலர் அவரை உபத்திரவப்படுத்தி உதவி கேட்டபோது, அவரிடம் ஒன்றுமில்லாதபடியால், அந்தக் குதிரையை விற்று கிடைத்த பணத்தை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தனுப்பினார்.

குதிரையை விற்ற பிறகு தமக்காக வேறொரு குதிரையை வாங்காமல் வண்டியையும் விற்றால் நலமென அதை விற்க ஏற்பாடு செய்தார். ஆனால் அது மிகவும் பழைய வண்டியானபடியால் யாரும் அதை வாங்கவில்லை. முன்போல கேட்டவர்களுக்கு இரவலாக அதைக் கொடுத்து உதவினார்.

*1873*-ம் வருஷத்திலே சால்சானோ பட்டணத்தில் வாந்தி பேதி வேகமாக பரவியது. சுகாதார விதிகளும், ஒழுக்கங்களும் அறியாத அவ்வூரார் வியாதியைத் தடுக்கவும், குணப்படுத்தவும், வியாதி தொத்திப் பரவாதபடி முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்துகொள்ளவும் முடியாதவர்களாயிருந்தனர். ஆகையால் சார்த்தோ சுவாமியார் தாமே வைத்தியரும், உணவளிப்பவரும், சுகாதார மேற்பார்வை யாளராகவும், ஆத்தும குருவுமாயிருந்தார். வியாதிக்காரருக்கு மருந்து கொடுத்து, மரிப்பவரை நல்லடக்கஞ் செய்வதுமன்றி, மற்றவர்களுக்கு மன தைரியமூட்டி, ஆறுதல் கூறி, உற்சாகங் கொடுத்துவந்தார். "சார்த்தோ சுவாமியார் இல்லாவிட்டால் இன்னும் எத்தனையோ பேர் வியாதியால் வருந்தி இறந்து இருப்பார்கள்" என்று சால்சானோ பட்டணத்தார் கூறினர்.

இந்தக் கொடிய வியாதியைக் குணமாக்க அரசாங்க வைத்தியர்கள் கொடுக்கும் மருந்து மெய்யாகவே வியாதியைக் குணப்படுத்தவல்ல, ஆனால் சீக்கிரம் உயிரை கொல்ல எடுத்த ஓர் உபாயமென்று அவ்வூர் ஜனங்கள் எப்படியோ தவறான எண்ணம் கொண்டுவிட்டார்கள். ஆகையால் எந்த வியாதியஸ் தனும் சார்த்தோ சுவாமியார் கையால் கொடுக்கும் மருந்தைக் குடிப்பானேயொழிய அரசாங்க வைத்தியன் கொடுப்பதைக் கையால் தொட மாட்டான். ஆகவே, பட்டணம் முழுவதும் சுற்றித்திரிந்து வியாதியஸ்தரின் வீடுகளைத் தேடிச்சென்று தமது கையாலேயே அவர்களுக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்துவந்தார் பங்குசுவாமியார்.

வியாதி தொத்தி ஊரெங்கும் பரவாமலிருக்கவும், மரித்தவர் தொகையை அறிந்து மற்றவர்கள் பயப்படாமல் இருக்கவும், இறந்தவர்களை இரவிலே அடக்கம் செய்வது அவசியமென்றும், அடக்கத்துக்கு எவரும் போகக்கூடாது என்றும் அரசு சட்டம் போட்டது. பயந்த கூலிக்காரர் சரியான சங்கையோடு சடலங்களைப் புதைப்பார்களோ என்னவோவென்று கவலைகொண்ட சார்த்தோ சுவாமியார் தாமே ஒவ்வொரு அடக்கத்துக்கும் முன்னின்று திருச்சபை முறைப்படி செய்யவேண்டிய ஜெபங்களைச் சொல்லி, சில சமயங்களில் சவப்பெட்டியைத் தாமே கூடத் தூக்கி, கல்லறை வெட்டுபவர்களுக்கும் உதவிசெய்து, அடக்கம் ஒழுங்காக நடந்தேறும்படி பார்த்துக்கொள்வார். இவ்வாறு ஆபத்தும் கஷ்டமுமான வேலையை அவர் பலநாட்களாக செய்த படியால், அவருடைய திடகாத்திரமான உடல் மெலிந்து நோயுற்றவர்போல் காணப்பட்டார்.

அவருடைய பழைய சிநேகிதர் சங். கார்லோ சுவாமி அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டு, "சார்த்தோ, சற்று சுகம் இல்லைபோலிருக்கிறதே" என்றார். "ஓ! சுகமில்லாதவனைப் போல் காணப்படுகிறேனோ" என்று சார்த்தோ ஒரு அசட்டை யான பதில் கூறிப் போனார்.

"சார்த்தோவுக்கு மெய்யாகவே நல்ல சுகமில்லை. சிறிது நேரம்கூட அவர் அறையில் தங்குவதில்லை. இரவிலும் கண்விழித்து ஊரெல்லாம் சுற்றிவருகிறார். சாப்பிடவும் அவருக்கு நேரமில்லை. அதனால்தான் எலும்பும் தோலுமாய், கண் குழிவிழுந்து கன்னம் ஒட்டி வியாதிப்பட்டவர்போல் இருக்கிறார்" என்று சகோதரிகள் இருவரும் பரிதாபப்பட்டனர்.

"ஆமாம், உம் சகோதரிகள் சொல்வது உண்மையே. இப்படி உடம்பைக் கெடுத்துக்கொண்டு நீர் வியாதியாய் விழுந்துவிட்டால் எல்லோருக்கும் நஷ்டந்தானே. தன் உடம்பை சரியாய் கவனித்துக்கொள்ளவேண்டியது ஒவ்வொருவனுடைய கடமையல்லவா?" என்று கார்லோ சுவாமியார் சொல்லவே,

"கார்லோ சுவாமியார் சீக்கிரம் பெரிய நியாயவாதி ஆகிவிடுவார்போலிருக்கிறது" என்று வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்தார் சார்த்தோ சுவாமியார்.

கார்லோ சுவாமியாரோ சார்த்தோவின் உடல்நிலைப் பற்றி சிரேஷ்டர் சுவாமியாருக்கும் மேற்றிராணியாருக்கும் உடனே தெரிவித்தார். மேற்றிராணியார் சார்த்தோ சுவாமியாருக்கு அன்பு நிறைந்த கடிதம் எழுதி, அவர் தமது பங்குக் கிறீஸ்தவர்களுக்காக எடுத்துக்கொள்ளும் அக்கறைக்கும் உழைப்புக்கும் மெச்சினாலும், தன் உடம்பை சீராய்க் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று புத்தி சொல்லி எச்சரித்தார்.

நாளடைவில் தொத்து வியாதியும் குறைய, பங்கு சுவாமியாருடைய அலைச்சலும், கண்விழிப்பும் குறைந்து, மறுபடியும் முன்போல் நல்ல ஆரோக்கியமாய் இருந்தார் சார்த்தோ.

சால்சானோவின் கோவில் சிறப்பமைந்ததென்று முன் கூறியிருக்கிறோம். ஆயினும் சங். சார்த்தோ சுவாமியார் அந்த கோவிலை இன்னும் அலங்கரிப்பதிலும், தேவாராதனைக்கு

தொடர்ச்சி 32-ம் பக்கம் காண்க . . . . .

# தப்பறைகளின் தொகுப்புரை

## பாகம்-2

Abbé Matthias Gaudron SSPX



திருச்சபையில் நெருக்கடியா? இல்லை என்று தங்களுடைய சிரசை மண்ணுக்குள் புதைத்து வைக்கும் பலரின் வறட்டு வாதங்களுக்கு பதிலளிக்கும் வகையிலும், குழம்பியுள்ள கத்தோலிக்கர்களுக்கு இக்குழப்பத்தின் காரணத்தை தெளிவாக விளக்கும் வகையிலும் எழுதப்பட்ட நூல்தான்: ''திருச்சபையிலுள்ள நெருக்கடியைப்பற்றிய தெளிவுரை''. இது கேள்வி – பதில் நடையில் உருவாக்கப்பட்ட காவியம். சுமார் 250 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 10 பாகங்களாக உள்ளது. இந்நூலின் ஆசிரியர், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் குரு ஆவார். இந்நூலின் 3-ம் பாகமான 'இரண்டாம் வத்திக்கான் சங்கம் குறித்தான கேள்வி பகுதியின்' 2-ம் பாகத்தை இங்கு தமிழில் வழங்குகிறோம் – ஆசிரியர்

கேள்வி 1 & 2 சாங்க்தா மரியா, செப்டம்பர் – அக்டோபர் 2012 இதழில் காண்க ...

### 3. திருச்சபையின் நெருக்கடி நிலையில் சங்கத்தின் பாதிப்பு என்ன?

*திருச்சபையை மறைமுகமாக சீரழித்துக்கொண்டிருக்கிற விடுதலைவாத மற்றும் நவீனவாத சக்திகள் சங்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வதில் வெற்றி பெற்றுவிட்டன. இதன் காரணமாக, நீண்ட காலமாக திருச்சபையில் கட்டி எழுப்பப்பட்டு வந்த ஒரு நெருக்கடி நிலையைப் பற்றியெரியச் செய்த தீப்பொறி இரண்டாம் வத்திக்கான் சங்கமே என்று சொல்லலாம்.*

#### 3.1 இந்த நெருக்கடி நிலையின் மூலாதாரங்கள் எவ்வளவு காலத்திற்கு முன்பே தொடங்கின?

*''நவீனவாதத் தப்பறை இனிமேலும் திருச்சபைக்கு வெளியே இருக்கிற ஓர் எதிரி அல்ல, மாறாக அதன் திறமை மிக்க தலைவர்கள் இன்னும் தங்கள் நிஜமான நோக்கங்களை மறைக்கிறார்கள் என்றாலும், அது திருச்சபைக்குள் ஊடுருவி விட்டது'' என்று அர்ச். பத்தாம் பத்திநாதர் தமது பாஷெந்தி (Pascendi) சுற்றுமடலில் ஏற்கனவே கண்டறிந்து கூறியிருக்கிறார்.*

### 3.2 பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர் மிகுந்த துடிப்பான முறையில் இந்த நவீனப் பதிதர்களுக்கு எதிராகப் போராடவில்லையா?

அர்ச். பத்தாம் பத்திநாதர் நவீனவாதத்திற்கு எதிராக ஆற்றலோடு போராடினார்; பன்னிரண்டாம் பத்திநாதர் வரை அவருடைய ஸ்தானாதிபதிகளும், கூடக் குறைய ஆற்றலோடு அப்படியே போராடினார்கள்; ஆனாலும் உண்மையில் அதன்மீது வெற்றிகொள்ள அவர்களால் முடியவில்லை. (1950-ல்) புதிய இறையியல் என்று அழைக்கப்பட்ட கோட்பாட்டைக் கண்டனம் செய்த பன்னிரண்டாம் பத்திநாதரின் "ஹூமானி ஜெனேரிஸ் *(Humani Generis)*" சுற்றுமடல் வெளியரங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் நிஜத்தில் அது அநேகரால் வெறுத்துத் தள்ளப்பட்டது. அவர்கள் கண்டனம் செய்யப்பட்ட கொள்கைகளில் இன்னும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். குருத்துவ உருவாக்க இல்லங்களில் (குருமடங்களில்) எதிர்கால குருக்களும் இப்படியே, கண்டனம் செய்யப்பட்ட அந்தக் கொள்கைகளில் ஆர்வம் காட்டும்படி ஊக்குவிக்கப்பட்டார்கள்.

### 3.3 இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையில் ஒரு புரட்சி என்று சொல்லப்பட முடியுமா?



அதன் ஆதரவாளர்களில் சிலர்கூட, "இந்தச் சங்கம் திருச்சபையில் ஒரு புரட்சியாக இருந்தது" என்று உரத்த சத்தமாகவும், தெளிவாகவும் அறிக்கையிடுகிறார்கள். உதாரணமாக, கர்தினால் சுவேனென் *(Suenens)* சங்கத்தை பிரெஞ்சுப் புரட்சியோடு ஒப்பிட்டுப் பேசினார். "இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையில் 1789 ஆகும்" என்று கூறினார். சங்கத்தின் வேதசாஸ்திரியான தந்தை யுவெஸ் கோங்கார் சபையை போல்ஷேவிக் (ரஷ்யப்) புரட்சியோடு ஒப்பிட்டார்: "திருச்சபை அமைதியான முறையில் தனது அக்டோபர் புரட்சிக்கு உள்ளாகி யிருக்கிறது" என்றார் அவர்.

## 4. விடுதலைவாதிகள் எப்படி சங்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள்?

23-ஆம் அருளப்பர் மற்றும் 6-ம் சின்னப்பர் ஆகியோரின் ஆதரவின் பலனாக, விடுதலைவாத, நவீனவாத சக்திகள், சங்கத்தின் பாடங்களுக்குள் பெரும் எண்ணிக்கையிலான தங்களுடைய சிந்தனைகளை அறிமுகப்படுத்த முடிந்தது. சங்கத்திற்கு முன்பாக, ஆயத்த ஆணையம், திருச்சபையின் விசுவாசத்தின் எதிரொலியாக இருந்த சட்ட முன்வரைவுகளைக் கவனமாகத் தயாரித்து இருந்தன. இந்த முன்வரைவுகளைப்பற்றித்தான் விவாதமும், வாக்கெடுப்பும் நடந்திருக்க வேண்டும். ஆனால் அவை சங்கத்தின் முதல் அமர்வின்போது மறுத்துத் தள்ளப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக விடுதலைவாதிகளால் தயாரிக்கப்பட்ட புதிய முன்வரைவுகள் கொண்டுவரப்பட்டன.

### 4.1 சங்கத்தில் பாரம்பரிய விசுவாச சத்தியத்தை ஆதரித்தவர்கள் யாருமே இருக்கவில்லையா?

சங்கத்தில் திருச்சபையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க உறுதிபூண்ட சுமார் 250 முதல் 270 மேற்றிராணிமாரின் குழு ஒன்று இருந்தது. இவர்கள் இறுதியாக *Coetus Internationalis Patrum* என்ற அமைப்பை உருவாக்கினார்கள். ஆனால் ஏற்கனவே நிலைபெற்றிருந்ததும், மிக நல்ல முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்ததுமான ரைன் நேசப் படை என்று அழைக்கப்பட்ட கர்தினால்மார், ஆயர்களின் குழு ஒன்றினால் இவர்கள் எதிர்க்கப்பட்டார்கள்.

### 4.2 ரைன் நேசப் படை என்ற பெயர் எங்கிருந்து வந்தது?

ஏறத்தாழ ரைன் நதியை எல்லையாகக் கொண்ட மேற்றிராசனங்களைச் சேர்ந்த எல்லா மேற்றிராணிமார்களுமே இந்த விடுதலைவாதக் குழுவின் தலைவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் இந்தக் குழு தட்டச்சு செய்யப்பட்ட காகிதங்களின் வெள்ளத்தால் சங்கத்தை நிரப்பியது. அவற்றில், மேற்றிராணிமார் எப்படி வாக்களிக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். இதனால்தான் பத்திரிகையாளரான சுவாமி வில்கன் "ரைன் நதி தைபேர் நதியோடு கலக்கிறது" *(The Rhine flows into the Tiber)* என்று பெயரிட்டார்.

### 4.3 இந்த நவீனவாதிகள் பெரும்பான்மையாக இருந்தார்களா?

ஒவ்வொரு புரட்சியையும் போலவே, இரண்டாம் வத்திக்கான் சங்கமும் பெரும்பான்மையால் வழிநடத்தப்படவில்லை. மாறாக செயல்திறன் மிக்கதும், நன்கு உருவாக்கப்பட்டதுமாகிய ஒரு சிறுபான்மையாலேயே வழிநடத்தப்பட்டது. மேற்றிராணி மார்களில் பெரும்பான்மையானவர்கள் உறுதியான தீர்மானமில்லாமலும், அதே அளவுக்கு பாரம்பரிய மேற்றிராணிமாரைப் பின்செல்லத் தயாராகவும் இருந்தார்கள். ஆனால் ரைன் நேசப் படையின் தலைவர்கள் பாப்பரசருக்கு நெருங்கிய நண்பர்களாக இருப்பதையும், அவர்களில் சிலர் (கர்தினால்கள் டோஃப்னர், சுவேனென், லெர்காரோ) சங்கத்தின் மேலதிகாரிகளாகக்கூட நியமிக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் கண்டபோது, அவர்கள் ரைன் நேசப் படையினரைப் பின்பற்றினார்கள்.

**4.4 அப்படியானால் சங்கம் தொடங்கப்பட்டபோது, இரண்டாம் வத்திக்கான் சங்க ஆவணங்கள் பெரும்பான்மையான மேற்றிராணிமாரின் சிந்தனையைப் பிரதிபலிப்பவையாக இல்லையா?**

*சங்கத்தின் காலத்திலிருந்து சங்.ஹான்ஸ் கங் (Hans Küng) என்பவர் தனது உண்மையான குணத்தையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். திருச்சபையின் இந்த ஞான அதிகாரி, கத்தோலிக்க வேதசத்தியங்களில் பெரும்பான்மையானவற்றை மறுதலிக்கிறார். அவற்றில் பாப்பரசரின் தவறாவரம், கிறீஸ்துநாதரின் தெய்வீகம் ஆகியவை அடங்கும். இந்தப் பெரும்பான்மையான வேத சத்தியங்களை எந்த அளவுக்கு அவர் மறுதலிக்கிறார் என்றால், சங்க சபையும்கூட, போதிப்பதற்கு அவருக்கு இருந்த அதிகாரத்தை அவரிடமிருந்து பறித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.*



**கார்ல் ரானர்** சே.ச.

**4.5 மற்ற பதித வேதசாஸ்திரிகளும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மீது தங்கள் செல்வாக்கைச் செயல்படுத்தினார்களா?**

*சேசு சபையினரான சங். கார்ல் ரானர் (Karl Rahner, 1904-84), அதிக விவேகமாகவும், வெளிப்படையாக அதிகம் பேசாதவருமாக இருந்த அதே வேளையில், தமது புத்தகங்களில், இணையான கொள்கைகளைப் பரப்பினார். 1949-லேயே, சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் அவர் மௌனம் காக்க வேண்டுமென்று பரிசுத்த ஸ்தானம் கட்டளையிட்டிருந்தது. ஆனாலும் அவர் சங்கத்தின்மீது மிக அதிகமான செல்வாக்கைக் கொண்டிருந்தார்; சங்கத்தில் அனைவரிலும் அதிக செல்வாக்குள்ள வேதசாஸ்திரி என்றுகூட சுவாமி வில்ட்ஜென் இவரைக் குறிப்பிடுகிறார்.*

*"ஜெர்மன் மொழி பேசும் மேற்றிராணிமார்களின் நிலை தொடர்ந்து ஐரோப்பிய (ரைன்) கூட்டணியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாலும், இந்தக் கூட்டணியின் நிலையே பொதுவாக சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாலும், தமது கருத்துக்கள் ஜெர்மன் மொழி பேசும் மேற்றிராணிமார்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், முழுச் சங்கத்தாலும் அவை ஏற்றுக் கொள்ளப்படும்படி ஒரேயொரு இறையியல் வல்லுநர் செய்திருக்க முடியும். அத்தகைய ஒரு இறையியல் வல்லுநர் இருந்தார்: சுவாமி கார்ல் ரானர், சே.ச."*

**4.6 சங்கத்தில் ரானரின் செல்வாக்கு குறித்து வேறு ஏதாவது சாட்சியம் இருக்கிறதா?**

*சுவாமி கோங்கார் இப்படி விவரித்தார்:*

*"ரானர் திக்ஸித், எர்கோ வேரும் எஸ்த்" (Rahner dixit ergo verum est: ரானர் கூறிவிட்டார், உண்மை புலப்பட்டது) என்ற சூழ்நிலை உருவாகிவிட்டது. நான் ஓர் உதாரணத்தை உங்களுக்குத் தருகிறேன். வேத சத்தியம் சார்ந்த ஆணையம், தம் சொந்த வல்லுநரைத் தம் பக்கத்தில் கொண்டிருந்த மேற்றிராணிமார்களால் உருவாக்கப்பட்டது. ஆனால் அதில் குறிப்பிட்ட சில துறவற சபைகளின் அதிசிரேஷ்டர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர் (உதாரணமாக சாமிநாதர் சபையினர் அல்லது கார்மேல் சபையினர்). இனி, ஆணையத்தின் மேஜைமீது இரண்டு ஒலிபெருக்கிக் கருவிகள் இருந்தன. ஆனால் ரானர் அவற்றில் ஒன்றை முழுக்க முழுக்க தமக்கு மட்டுமே வைத்துக்கொண்டிருந்தார். ரானர் சற்று ஆதிக்கத் தன்மையுள்ளவராக இருந்தார். அத்துடன் ரானரைத் தமது வல்லுநராகக் கொண்டிருந்த வியென்னாவைச் சேர்ந்த கர்தினால் மிக அடிக்கடி அவரை நோக்கித் திரும்பி, "ரானர், குயித்?" (Rahner Quid?: ரானர் என்ன கூறுகிறாய்?) என்று சொல்லியபடி, விவாதத்தில் தலையிடும்படி அவரை அழைத்துக்கொண்டிருந்தார். இயல்பாகவே ரானரும் தலையிட்டார்...*

**4.7 கார்ல் ரானரின் சிந்தனைப்போக்கு என்னவாக இருந்தது?**

*கார்ல் ரானர் திருச்சபையின் பாரம்பரிய போதனைக்கு எதிராக முழுவதும் கலகத்தில் ஈடுபட்டார். அவரைப் பொறுத்த வரை, திருச்சபையின் பாரம்பரிய போதனை என்பது ஓர் "ஒற்றைக் கல் சிற்பக்கலை" மற்றும் "பள்ளிக்கூட வேதசாஸ்திரம்" மட்டுமேயன்றி வேறொன்றுமில்லை. தமது வேதசாஸ்திர அகராதியின் இத்தாலியப் பதிப்பு வெளியிடப்பட்ட சமயத்தில்,1962, பெப்ருவரி 22 அன்று அவர் எழுதிய ஒரு கடிதம், திருச்சபையின் ஆசிரியத்தைப்பற்றி அவர் கொண்டிருந்த உணர்வுகளை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது:*

*"உரோமையில் இருக்கிற பாரம்பரியத்தின் பாதுகாவலர்களின் பிரசன்னத்தின் காரணமாக ஓர் இத்தாலியப் பதிப்பு நிச்சயமாக ஒரு விசேஷப் பிரச்சினையை எதிர்கொள்கிறது. மறுபுறத்திலோ, நான் முன் எப்போதையும்விட அதிகமாக என் நிலைகளில் திடப்படுத்தப்பட்டிருக்கிறேன். இந்த மனிதர்கள் எதையும் புரிந்துகொள்ள முடியாத விதத்திலும், அதனால் அவர்களுடைய குறுகிய மனங்களுக்கு எதிராக அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் காண முடியாத விதத்திலும் இந்தச் சிறு அகராதி எழுதப்பட்டிருக்கிறது என்றும் சொல்லலாம்."*

**4.8 கார்ல் ரானர் திருச்சபையின் பாரம்பரியத்துக்கும், ஆசிரியத்துக்கும் எதிரான தன்னுடைய கலகம் சங்கத்தின்போது வெளிப்பட அனுமதித்தாரா?**

*சங்கத்தின்போது ஒருநாள், பரிசுத்த பாப்பரசரின் அலுவலகத்தின் தலைவராயிருந்த கர்தினால் ஒட்டாவியானி ஓர் உரையில் சில நவீன மாற்றங்களைப்பற்றிய தமது மனக் கலக்கத்தை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். அவர் கிட்டத்தட்ட*

குருடாகியிருந்ததால், குறிப்புகள் ஏதுமின்றி பேசிக்கொண்டிருந்தார். அவரது உரைக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் கடந்து விட்டது. அவருடைய ஒலிபெருக்கிக் கருவி மிகச் சாதாரணமாக அணைக்கப்பட்டு விட்டது! வோர்க்ரிம்லர் என்பவருக்குத் தாம் எழுதிய, 1962, நவம்பர் 5 தேதியிட்ட ஒரு கடிதத்தில் இந்த நிகழ்ச்சியைப்பற்றிய தமது கருத்தை அவர் இப்படித் தெரிவித்து இருந்தார்: "ஒட்டாவியானி அளவுக்கு அதிக நேரம் பேசிக் கொண்டிருந்ததால், ஆல்ஃப்ரிங்க் அவருடைய உரையை மீண்டும் ஒருமுறை துண்டித்து விட்டார் என்பதைப்பற்றி சந்தேகமில்லாமல் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். எல்லோரும் கைதட்டத் துவக்கி விட்டார்கள் (இது வழக்கமல்ல). கற்றுக்கொண்ட பாடம்: மற்றொரு மனிதனின் வேதனையைப் போன்ற சந்தோஷம் எதுவுமில்லை."

**4.9 சங்கத்தின் போது ரானரின் கடிதங்களில் அவருடைய உணர்வுகளைப்பற்றிய வேறு அம்சங்களை நாம் காண்கிறோமா?**

சுவாமி கார்ல் ரானருக்கும், ஆஸ்திரிய பெண் கவிஞரான லூயிஸ் ரின்சர் (1911-2002) என்பவளுக்கும் இடையில் பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதப் போக்குவரத்து 1994-ல் புத்தகமாக வெளியிடப்பட்டது. இது ஒரு பெரும் துர்மாதிரிகையை விளைவித்தது: சங்கத்தின்மீது தமது செல்வாக்கை செயல்படுத்திக்கொண்டிருந்த அதே வேளையில், கார்ல் ரானர் இந்தப் பெண்ணோடு காதல் கடிதங்களைப் பரிமாற்றம் செய்துகொண்டிருந்தார். தமது இந்த ஆசாபாசத்தில், அந்தப் பெண்ணுக்கு ஒரு நாளைக்கு மூன்று கடிதங்கள்கூட அவர் எழுதியிருக்கிறார் (1964-ல் மட்டும் 276 கடிதங்கள்).

**4.10 வேறு தீய வேதசாஸ்திரிகள் யாரும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்தினார்களா?**

மற்றவர்களுக்கு நடுவில், சுவாமி கோங்கார், சுவாமி ஹென்றி த லுபாக், சுவாமி எட்வர்ட் ஷீல்பீக்ஸ், சுவாமி கர்ட்னி முர்ரே, போன்றவர்களின் பெயர்களைக் கூறலாம்.



**சங். கோங்கார் O.P.**

**4.11 இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்மீது சுவாமி கோங்கார் *(Pére Congar)* என்ன செல்வாக்கைக் கொண்டிருந்தார்?**

அதிமேற்றிராணியார் லெஃபவர் இந்த சம்பவத்தை விவரித்தார்:

"இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கியபோது அர்ச். லூயி தே ஃப்ரான்ஸுவாவில் (St. Louis de France) ஃப்ரெஞ்ச் மேற்றிராணிமார்களின் கூட்டங்களுக்கு நான் போவேன். ஆனாலும் காரியங்கள் நடக்கும் விதத்தைப்பற்றி நான் பிரமிப்படைந்தேன். மேற்றிராணிமார்கள் உள்ளபடியே கோங்காருக்கும், வந்திருந்த மற்ற வல்லுநர்களுக்கும் முன்பாக இளம் சிறுவர்களைப் போல நடந்துகொண்டனர். சுவாமி கோங்கார் தலைமை மேஜைக்கு ஏறிப்போய், தமது வார்த்தைகளில் எந்தக் கட்டுப்பாடுமின்றி, யாராவது ஒரு மேற்றிராணியாரின் பெயரைச் சொல்லி, "வந்திக்கத்தக்க ஆண்டகையே, நீங்கள் இந்த விவாதப் பொருளில் இந்த விதத்தில் தலையிட வேண்டும். கவலைப் படாதீர்கள், நீங்கள் பேச வேண்டியதை நாங்களே தயார் செய்து தருவோம். நீங்கள் அதை வாசித்தால் மட்டும் போதும்!" என்று சொல்வார். என் கண்களையோ, காதுகளையோ என்னால் நம்ப முடியவில்லை! இந்தக் கூட்டங்களுக்குப் போவதை நான் நிறுத்திக்கொண்டேன்..."

**4.12 சுவாமி கோங்காரின் செல்வாக்கைப்பற்றிய வேறு ஏதாவது சாட்சியங்கள் உள்ளனவா?**

போர்ட்டோவின் (Bordeaux) துணை ஆயர், மொன்சிஞ்ஞோர் தெஸ்மாஸியேர் விவரித்ததாவது:

"பிற்பகலில் பயிற்சி வகுப்புகள் தொடர்கின்றன. நான் என்னுடைய வகுப்பிற்குப் போவேன். அது வேதாகமம் மற்றும் பாரம்பரியத்தைப்பற்றி சுவாமி கோங்காரால் நடத்தப்பட்டது. நாங்கள் சுமார் ஒரு டஜன் பேர் இருக்கிறோம். மறுநாள் நாங்கள் செய்யவேண்டிய தலையீடுகளை நாங்கள் தயாரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இரண்டாவதை எடுத்துக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளப்படுகிறேன். சுவாமி கோங்கார் நான் பேசவேண்டிய பாடத்தை எனக்காகத் தயார் செய்யும்வரை, நான் மறுப்பேதும் சொல்வதில்லை. இது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவர் நாளைக்கு பேருந்தில் வைத்து அதை என்னிடம் தருவார். பேருந்தில்தான் அந்தப் பாடத்தை நான் முதல் முறையாகப் பார்க்கிறேன்; அதில் எதையும் மாற்றுவதில்லை என்று நான் தீர்மானித்திருக்கிறேன். அர்ச். இராயப்பர் பேராலயத்திலிருந்து வெளியேறி, நான் பதிவு செய்துகொள்ளப் போகிறேன். நான் இருபத்தொன்றாவது..."

**4.13 சுவாமி கோங்கார் இதைப்பற்றி என்ன சொல்கிறார்?**

சுவாமி கோங்கார் சங்கத்தில் தமது செல்வாக்கைக் குறைத்துக்கொண்டார். இருந்தாலும் அவர் தம் செயலை இப்படிச் சுருக்கமாகக் கூறினார்: "சங்கத்தின் தயாரிப்பு கியூரியா மற்றும் பரிசுத்த அலுவலகத்திலுள்ள மனிதர்களின்... ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. செயல்பூர்வமாகப் பேசும்போது, அவர்களை சிறுபான்மையில் சேர்த்துவிடுவதில்தான் எல்லாமும் அடங்கியிருந்தது." இது அவருக்கு ஒரு வெற்றியாக இருந்தது. பத்து வருடங்களுக்கு முன்பு, தமது மடத்து அதிபர்களால் அனுமதிக்கப்பட்டு, அவர் தம்முடைய தனிப்பட்ட நாட்குறிப்பில், பின்வரும் தீர்மானங்களை எழுதினார்:

"ஒவ்வொரு வாய்ப்பையும் அனுகூலமாக்கிக் கொண்டு, தொடர்ந்து இதே முறையில் எழுது. என் போராட்டம்

குறிப்பாக அங்குதான் இருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் நான் சொல்வதும், எழுதுவதுமாகிய எல்லாமும் அவர்களுடைய அமைப்புக்கு எதிரானது என்பதை நான் அறிவேன் (அவர்களும் அறிவார்கள்). ஆம். அதுதான் என்னுடைய நிஜமான போராட்டம்: என்னுடைய வேதசாஸ்திர, வரலாற்றுபூர்வமான, திருச்சபையியல் சார்ந்த, மற்றும் மேய்ப்புப்பணி சார்ந்த வேலையில் உள்ள போராட்டம். மிகச் சரியாக, எதுவுமே நடக்காததுபோல, நான் இப்போது கற்பித்துக்கொண்டிருக்கிற வகுப்பு ஓர் உண்மையான பதில் ஆகும். இது சட்ட வல்லுநர்களின் நாற்காலிக்குக் கீழே நான் வைக்கும் என்னுடைய உண்மையான வெடிகுண்டு ஆகும்.''

சங்கத்திற்குப் பிறகு அவர் இப்படி அறிக்கையிட்டார்:

''அமைப்பின் ''சமரசமற்ற தன்மை'' என்று நான் அழைக்கக்கூடிய காரியத்தைச் சங்கம் நீர்த்துப்போகச் செய்துவிட்டது. அமைப்பு என்ற வார்த்தையின் மூலம், திருச்சபைச் சட்டத்தால் தொகுக்கப்பட்டு, அறிக்கைகள், எச்சரிப்புகள், உரோமைத் தணிக்கையாளர்களுக்கு எழுத்து பூர்வமான சமர்ப்பணம் போன்றவற்றோடு பன்னிரண்டாம் பத்திநாதரின் கீழ் ஒரு நெருக்கமான, போதிய திறனுள்ள கண்காணிப்பால் பாதுகாக்கப்பட்டு, உரோமைய பல்கலைக்கழகங்களால் கற்பிக்கப்படுகிற போதகத்தால் பரப்பப்படும் சிந்தனைகளின் மிகக் கட்டுக்கோப்பான தொகுப்பை நான் குறிப்பிடுகிறேன்.''

### 4.14 சுவாமி முர்ரே *(Fr. Murray)* என்பவர் யார்?

அமெரிக்க சேசு சபைக் குருவாகிய சுவாமி ஜான் கர்ட்னி முர்ரே, ''மதச் சுதந்திரம் என்னும் பிரச்சினை'' என்ற தனது ஆய்விற்காக பரிசுத்த ஸ்தானத்தால் 1957-ல் கண்டனம் செய்யப்பட்டிருந்தார். ஆனாலும் ஒரு வல்லுநராக சங்கத்திற்கு வரும்படி அவர் 1963-ல் அழைக்கப்பட்டார். மதச் சுதந்திரத்தின் மீதான விவாதங்களின்போது, சில ஆயர்களின் தலையீடுகளை எழுதித் தரும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. இவ்வாறு அவர் பெருமளவுக்கு தமது செல்வாக்கைச் செயல்படுத்தினார். தமது வாழ்வின் இறுதியில், மத சுதந்திரத்தின் காரியத்தில் திருச்சபையின் போதனை பரிணாம மாற்றமடைந்தது போலவே, கருத்தடையின் மீதான அதன் போதனையும் மாற்றமடைய முடியும் என்று எண்பிக்க அவர் முயன்றார்.

## 5. இவை எல்லாவற்றிலுமிருந்து நாம் என்ன முடிவுக்கு வரக்கூடும்?

கங், ரானர், கோங்கார், லுபாக், முர்ரே போன்ற மனிதர்கள் சங்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்தியிருக்கிறார்கள் என்பது அதற்கோ, அல்லது அதன் சீர்திருத்தங்களுக்கோ சாதகமாகப் பேசுவதில்லை. துரதிருஷ்டவசமாக, பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பரின் சில பிரகடனங்களும்கூட, அதற்கு அனுகூலமாக இல்லை. உதாரணமாக: 1963-ல் அவர் செய்த பிரகடனம் (அப்போது அவர் இன்னும் ஒரு சாதாரண மேற்றிராணியாராக மட்டுமே இருந்தார்):

''இவ்வளவு விரிவான தயாரிப்புகளோடு தொடங்கிய ஒரு சங்கம் இதற்கு முன்னால் இருந்ததாக அறியப்பட்டதில்லை; கத்தோலிக்க சிந்தனை இதற்கு முன் இவ்வளவு அதிகமாக ஒருபோதும் ஒலித்ததுமில்லை. மேற்றிராணிமார்களும், கத்தோலிக்கப் பல்கலைக்கழகங்களும், சபைகளின் அதிசிரேஷ்டர்களும் சங்கத்தால் ஆய்வுசெய்யப்பட்ட பிரச்சினைகளைப்பற்றிய தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தது மட்டுமின்றி, கத்தோலிக்கப் பொது விசுவாசிகள் மற்றும் கத்தோலிக்கர் அல்லாதவர்களில் அதிகமான சதவீதத்தினரும்கூட, தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். ஹென்றி த லுபாக், ஜே. டேனியலூ, யுவெஸ் கோங்கார், ஹான்ஸ் கங், ஆர். லொம்பார்டி, கார்ல் ரானர் இன்னும் பல புகழ்பெற்ற வேதசாஸ்திரிகள் (சங்கத்தின்) ஆயத்த வேலையில் ஓர் அசாதாரணமான முறையில் பங்கு வகித்தார்கள்.''

. . . . . 27-ம் பக்கம் தொடர்ச்சி

தேவையான நல்ல பொருட்களை சேகரிப்பதிலும் கவனமாய் இருந்தார்.

தமக்கு மிகவும் பிரியமுள்ள கம்பீரமான கிரகோரியன் இராகத்தில் பாட்டுப்பாடச் சிறுவர் கூட்டத்தைச் சேர்த்துத் தாமே பாடல்களைக் கற்றுக்கொடுப்பார். திருவிழாவைச் சிறப்புடன் கொண்டாட வெகு சிரத்தையெடுத்துச் செலவும் செய்வார். நூதனமான அலங்காரங்கள் கோவிலில் செய்ய வேண்டுமென்பதே அவருடைய ஆசை. அவர் நினைத்த ஆடம்பரங்களெல்லாம் ஆலயத்தில் செய்ய அவரிடத்தில் அவசியமான பொருளில்லையென்று கண்ட அவர் சிநேகிதர்களில் ஒருவர்,

''பணமின்றி நீர் எண்ணியிருக்கும் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் எவ்வாறு நிறைவேற்றப்போகிறீர்?'' என்று கேட்டதற்கு,

''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்று நம்பிக்கையும், தாழ்ச்சியும் அடங்கிய பதிலை உரைத்தார் சார்த்தோ.

# விபூதி

**அருட்கருவிகள் V**

நன்றி: கத்தோலிக்கக் களஞ்சியம், திருச்சி, 1941

விபூதி என்பது சாம்பல். தபசுகாலத்துக்கு ஆரம்பமாயிருக்கிற புதன்கிழமை விபூதித் திருநாள் என்று பெயர் வழங்கிவருகிறது. தபசுகாலம் நாற்பது நாள் அடங்கியது. நாம் நமது சரீரத்தைத் தண்டித்து அடக்க வேண்டும் என்பதின் அவசியத்தைத் திருச்சபை நமக்கு இந்த நாட்களில் நினைப்பூட்டுகிறது. தபசு செய்யாமல் அலட்சியமாயிருக்கிறவன் கெட்டழிந்துபோகும் ஆபத்தைத் தேடிக் கொள்கிறான். கிறீஸ்தவன் தனது கடைசி முடிவையும், மண்ணுக்குத் திரும்பிப் போகவேண்டியதையும் எக்காலமும் மறந்துபோகக் கூடாது என்பதும் திருச்சபையின் கருத்து.

நாம் பிறக்கும்பொழுதே, பாவத்தோடு பிறக்கிறோம். பின்னும் புத்தி விபரம் அறிந்ததுமுதல் எத்தனையோ பாவங்களைக் கட்டிக்கொள்கிறோம். இவைகளால் சர்வேசுரனுக்கு உண்டாகும் கோபத்தைத் தபசினாலும் பரித்தியாக முயற்சிகளினாலும் தணிக்கப் பிரயாசப்பட வேண்டுமென்று திருச்சபை வலியுறுத்துகிறது. நம் மேல் சுமத்தப்பட்ட இந்தக் கடமையை நமக்கு எடுத்துரைப்பதற்காகவே விபூதி திருநாள் அன்று சாம்பலை மந்திரித்து நெற்றியில் பூசுகிற சடங்கு ஏற்படலாயிற்று.

### பூர்வீக வழக்கம்:

திருச்சபையில் வழங்கி வருகிற மற்ற அநேக ஆசாரங்களைப் போலவே, சாம்பலின் உபயோகமும் ஜனங்களுக்குள், ஏற்கனவே அநுசரிக்கப்பட்டுவந்த வழக்கங்களில் ஒன்றுதான். பழைய ஆகமங்களில் இதன் உபயோகத்தைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாவீது இராஜா தன் பாவங்களுக்காகப் பச்சாதாபப்பட்டு, "சாம்பலைப் போஜனம் போலும் புசித்துக் கண்ணீரால் என் பானத்தைக் கலந்தேன்" என்று கூவினார். யோனாஸ் தீர்க்கதரிசி செய்த பிரசங்கத்தின் பயனாக, நினிவே நகரத்தார் தபசு செய்யத் தீர்மானித்து சாக்குத் துணியை உடுத்திக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்து இருந்தார்கள். ஆகையால் திருச்சபை ஆரம்பத்தில் மனந்திரும்பின யூதர் இந்த வழக்கத்துக்குக் காரணமாயிருந்தார்கள் என்று சொல்ல நியாயமுண்டு.

திருச்சபை ஆரம்ப காலங்களில் சாம்பல் பெரும் பாவிகளுக்கு விதித்த தண்டனைகளில் ஒன்றாயிருந்தது. கனமான பாவங்களைக் கட்டிக்கொண்டவர்கள் மன்னிப்படைய வேண்டுமானால், விபூதித் திருநாட் காலையில் தபசுக்குரிய உடை உடுத்திக் கோவில் வாசற்படியில் வந்து நிற்பார்கள். அப்போது அவர்களுக்குச் சாக்குத்துணியை அணிந்துகொள்ளக் கொடுத்துச் சாம்பலை அவர்கள் மேல் தூவுவார்கள். அன்று முதல் பெரிய வியாழக்கிழமை வரைக்கும் கோவிலில் பிரவேசிக்கக்கூடாது என்று சட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பிரசித்தமான பாவிகளல்லாதவர்களில், பக்திமான்கள் சிலர் தாழ்ச்சியின் காரணமாக மேற்கூறினவர்களுக்குப் போலவே தங்கள் பேரிலும் சாம்பலைத் தூவும்படி கேட்டுக் கொண்டார்கள். இதிலிருந்துதான், நாளாவட்டத்தில் கத்தோலிக்கர் யாவருக்கும் சாம்பல் பூசுகிற வழக்கம் உண்டானது. *1090-ம் வருடத்தில் இதைப்பற்றிச் சட்டம்* ஒன்று ஏற்படுத்தப்பட்டது

### தற்கால வழக்கம்:

முந்தின வருடத்தில் குருத்து ஞாயிறன்று மந்திரித்த குருத்துகளைச் சுட்டு அந்த சாம்பலைத்தான் விபூதித் திருநாள் அன்று உபயோகிக்கிறார்கள். சில ஞான ஆசிரியர் இதற்கு ஓர் அர்த்தமுங் கூறி விளக்கியிருக்கிறார்கள். குருத்து வெற்றிக்கு அடையாளம். பாவத்தின் பேரிலும், பசாசின் பேரிலும் நாம் வெற்றி அடையவேண்டும். தாழ்ச்சியும் தபசுமின்றி இந்த வெற்றியை நாம் அடைய முடியாது என்பதற்குச் சாம்பல் அடையாளம் என்று சொல்கிறார்கள்.

சாம்பலை மந்திரிக்கும்போது குருவானவர் சொல்கிற நான்கு ஜெபங்களில் வெகு நேர்த்தியான கருத்துக்கள் நிறைந்துள்ளன. பாவிகளாகிய நம்மை சர்வேசுரன் காப்பாற்றி, சாம்பலும் தூசியுமான நமது பேரில் இரக்கமாயிருந்து, இந்த சாம்பலை நமக்கு இரட்சண்ய மருந்தாக்கி, நினிவே நகரத்தார் தபசு செய்யத் தீர்மானித்ததைக்கண்டு சர்வேசுரன் அவர்களை அழித்துப்போடாமல் காப்பாற்றினவண்ணம் தபசு செய்து மன்னிப்படைய விரும்புகிற நம்மையும் காப்பாற்ற வேண்டும் என்று மன்றாடுவதே இந்த ஜெபங்களில் உள்ள சாராம்சம்.

சாம்பலை மந்திரித்தபின் குருவானவர் அதை எடுத்து இதர குருக்கள் உச்சியிலும் விசுவாசிகளின் நெற்றியிலும் பூசி, "மனிதனே, நீ தூசியாயிருக்கிறாய், மீண்டும் தூசியாய் போவாய் என்று நினைத்துக்கொள்" என்று சொல்கிறார். நாம் எல்லோரும் ஒருநாள் மரிக்கவேண்டும் என்னும் சத்தியத்தை இது நமக்கு நினைப்பூட்டுகிறது. ஓர் ஞான ஆசிரியர் சொல்லியிருப்பதுபோல், சுட்ட சாம்பலை இன்னும் சுடாத

சாம்பலோடு கலக்கிறார். ஆண், பெண், பெரியோர், சிறியோர் சகலரும் இதை நெற்றியில் தரித்துத் தங்கள் கடைசி முடிவை ஞாபகப்படுத்திக் கொள்வார்களாக. சாம்பலை மந்திரித்துப் பூசுவது நாம் ஒருநாள் மரிக்க வேண்டும் என்பதையும், தாழ்ச்சியும், தபசு முயற்சிகளும் பாவத்துக்குப் பரிகரிக்க அவசியம் என்பதையும் நினைப்பூட்டுவதற்காகவேயன்றி வேறல்ல.

**விபூதி மந்திரிக்கும் சடங்கு:**

முந்தைய ஆண்டு குருத்து ஞாயிறன்று மந்திரித்த ஒலிவ மரக் கொம்புகள் அல்லது குருத்தோலைகளைச் சுட்டெரித்து எடுத்த சாம்பலைக் குருவானவர் பூசைக்குமுன் மந்திரிக்கிறார். (குரு ஊதா காப்பாவைத் தரித்துக்கொண்டு, பீடத்திலேறி நடுவில் முத்தஞ்செய்து, நிருபப்பக்கஞ் சென்று பின்வருமாறு சொல்லுவார். பாடகர் பாடுவார்கள்.)

***ஆரம்ப வாக்கியம் - சங். 68:17:***

ஆண்டவரே, உமது இரக்கம் மகா பட்சம் நிறைந்த தாகையால், எங்கள் விண்ணப்பத்திற்கு செவிசாய்த்தருளும். ஆண்டவரே, தேவரீருடைய இரக்கங்களின் பெருக்கத்திற் கேற்றபடி எங்களை நோக்கியருளும். (சங். ஷெ:2) சர்வேசுரா, தேவரீர் என்னை இரட்சியும்; ஏனெனில் வெள்ளம் என் ஆத்துமம் மட்டும் பெருகி நுழைந்தது. –பிதாவுக்கும் . . . . . (மறுபடியும்: "ஆண்டவரே. . . . ." சங்கீதம் வரையில்)

(குரு அங்கேயே நின்றுகொண்டு, கரங்களைக் குவித்தவண்ணம்:)

***குரு:*** ஆண்டவர் உங்களுடனே இருப்பாராக;

***பரி:*** உமது ஆவியோடும் இருப்பாராக.

*செபிப்போமாக: (செபம் 1)*

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா, பச்சாதாபப் படுகிறவர்களை மன்னித்தருளும்; தேவரீரை மன்றாடுகிற வர்கள்மீது இரக்கமாயிரும்; பரமண்டலங்களிலிருந்து உமது பரிசுத்த சம்மனசானவரைத் தயவுகூர்ந்து அனுப்பி, இந்தச் சாம்பலை (இரு முறை சிலுவை அடையாளம் வரைந்து கொண்டு) ✠ ஆசீர்வதித்து ✠ அர்ச்சிக்கும்படி செய்தருளும். உமது பரிசுத்த நாமத்தைத் தாழ்ச்சியோடு மன்றாடுகிறவர் களுக்கும், தங்கள் பாவங்களைத் தாங்களே மனதார உணர்ந்து தங்கள் குற்றங்களைத் தாங்களே ஒப்புக்கொண்டு, உமது தெய்வீகத் தயவின் சமுகத்தில் தங்கள் அக்கிரமங்களை நினைத்து, மனம் நொந்து வருந்துகிறவர்களுக்கும், அல்லது உமது தாராளம் நிறைந்த நன்மை பெருக்கத்தைத் தாழ்மை யோடும் தளரா நெஞ்சத்தோடும் இரந்து மன்றாடுகிற யாவருக்கும், இந்தச் சாம்பல் இரட்சண்ய சுகந்தரும் மருந்தா யிருப்பதாக! இந்தச் சாம்பலை இட்டுக்கொள்ளுகிறவர்கள் எல்லோரும் உமது மகா பரிசுத்த நாமத்தை மன்றாடுவதின் மூலமாகத் தங்கள் பாவங்களினின்று விடுதலையடையவும், சரீர சுகத்தையும் ஆத்துமப் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ளவும் அநுக்கிரகஞ் செய்தருளும். –எங்கள் ஆண்டவ ராகிய கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.

*செபிப்போமாக: (செபம் 2)*


பாவிகள் அழிந்துபோகவேண்டுமென்றல்ல, ஆனால் அவர்கள் பச்சாதாபப்படவேண்டுமென்று விரும்புகிற சர்வேசுரா, மனித சுபாவத்தின் பலவீனத்தைத் தயவாய்க் கண்ணோக்கி, தாழ்ச்சிக்கு அடையாளமாகவும், பாவமன்னிப் படையப் பேறுபெற்றவர்களாகவும் எங்கள் நெற்றியிலிட்டுக் கொள்ள நாங்கள் தீர்மானித்திருக்கும் இந்தச் சாம்பலை உமது நன்மைத்தனத்தை முன்னிட்டு (சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு) ✠ ஆசீர்வதித்தருளக் கிருபை செய்து, நாங்களும் சாம்பலாயிருக்கிறோமென்றும், எங்கள் அக்கிரமத் துக்குத் தண்டனையாக மீளவும் சாம்பல் ஆவோமென்றும் அறிந்திருக்கிற நாங்கள் சகல பாவங்களுக்கும் மன்னிப்பையும், மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற சம்பாவனையையும் தேவரீருடைய இரக்கத்தால் அடையும் படி அநுக்கிரகஞ் செய்தருளும். –எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.

*செபிப்போமாக: (செபம் 3)*

தாழ்மையைக் கண்டு மனம் இளகுகிறவரும், பாவப் பரிகாரத்தினால் கோபந் தணிகிறவருமான சர்வேசுரா, எங்கள் விண்ணப்பங்களுக்குத் தேவரீருடைய அன்பின் செவிசாய்த்து, இந்தச் சாம்பலைப் பூசிக்கொள்ளும் உம் அடியார்கள் சிரசின் மீது உமது ஆசீர்வாத அருளைப் பரிவுடன் பொழிந்து, அவர் களை மனஸ்தாப உணர்ச்சியால் நிரப்பி, அவர்கள் நியாயமாய் கேட்கும் வரங்களைத் தவறாமல் தந்து, தந்தருளிய கொடைகள் எந்நாளும் பழுதின்றி நிலைத்திருக்கும்படி கட்டளையிட்டருளும். –எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.

*செபிப்போமாக: (செபம் 4)*

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா, சாம்பலும் சாக்குத் துணியும் அணிந்து தவம் செய்த நினிவே நகரத்தாருக்கு தேவரீருடைய இரட்சண்ய சுகந்தரும் மன்னிப்பையளிக்கச் சித்தமானீரே; நாங்களும் அவர்களைப் போல் மன்னிப் படைவதற்கு ஏற்றவண்ணம், அவர்களுடைய தவத்தை வெளியரங்கமாய்ச் சாம்பல் பூசிப் பின்பற்றும்படி எங்களுக்குத் தயவாய் அநுக்கிரகஞ் செய்தருளும். –எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.



# உரோமையின் முக்கிய பேராலயங்கள் - VI



❶

❷





❸

1. தேவமாதா பேராலயத்தின் பிரதானப் பீடம்.
2. கோதிக் (Gothic) கலையில் அமைந்துள்ள உட்புறத் தோற்றம்.
3. கலை நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட பைப் ஆர்கன்.





❹ அர்ச். சியென்னா கத்தரீனம்மாள் கல்லறை

❺ பேராலயத்தின் வெளிப்புறத் தோற்றம்

## தேவமாதாவின் பேராலயம்

Sancta Maria Supra Minerva - இது உரோமையில் கட்டப்பட்டுள்ள மிக பழமையான தேவாலயங்களில் ஒன்று. அர்ச். சுவாமிநாதர் சபையின் (Dominicans) தலைமையிடமாக சிறிது காலம் செயல்பட்டு வந்தது. தற்போது தலைமையகம் அர்ச். சுவாமிநாதர் நிறுவின அர்ச். சபினா பேராலயத்திற்கே மீண்டும் மாற்றப்பட்டுள்ளது. உரோமையில் கோதிக் (Gothic) கலையில் கட்டப்பட்ட வெகு சில ஆலயங்களில் இதுவும் ஒன்று.



உறுதிபூசுதல் வழங்குபவர்:

## வந். அல்போன்ஸோ டி காலரட்டா

மேன்மை தங்கிய அல்போன்ஸோ தே காலரட்டா ஆண்டகையவர்கள் ஸ்பெயின் நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர். 1980, ஜுன் 29-ம் தேதி குருப்பட்டமும், 1988, ஜுன் 30-ம் தேதி மேற்றிராணியார் பட்டமும் பெற்றவர். நமது சபைக் குருமடம் ஒன்றில் நீண்ட காலமாக அதிபராக இருந்தார். தற்போது ஸ்பெயினிலுள்ள குருக்கள் இல்லத்தில் தங்கி உறுதிபூசுதலும், குருப்பட்டமும் உலகெங்கும் வழங்கி வருகிறார்.

*Gracias Monseñor*







**Sancta Maria Publications,** 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: **8903007345**; 0462-2586201; 2572389. email: sspxindia@gmail.com